# வடமாகாணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

சரோஜா சிவசந்திரன் M.A

# வடமாகாணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

சரோஜா சிவசந்திரன் M.A

28.10.2013

தலைப்பு : வடமாகாணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

ஆசிரியர் : சரோஜா சிவசந்திரன் M.A

வெளியீடு : மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல: 07, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4398.
மின்னஞ்சல்: cwdjaffna.lk
இணையம்: cwdjaffna.org

அச்சிட்டோர் : தீபம் பிறிண்டேர்ஸ்
இல: 717 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

சகல உரிமைகளும் மகளிர் அபிவிருத்தி நிலையத்திற்கே உரியது.
இந்நூலிலுள்ள விடயங்களை மகளர் அபிவிருத்தி நிலையத்திற்கு முறையாக அறிவிப்பதன் மூலம் பயன்படுத்த முடியும்.

மேலதிக தகவல்களுக்கான தொடர்பு:-
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல: 07, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:- 021 222 4398

---

ISSN: 1800 -3109
ISBN: 977-180-03100-0-2

# வடமாகாணத்தில் வலுவூட்டப்பட வேண்டிய பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

## களஆய்வு அறிக்கை

### அறிமுகம்

வடமாகாணத்தில் பெண்கள் மட்டும் தனியாக தலைமை தாங்கும் குடும்பங்கள் தொடர்பாக, கள ஆய்வு மூலம் பெறப்பட்ட தரவுகள், தகவல்களை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டுள்ள இவ்வறிக்கை சமூகமட்டத்தில் பெண்கள் வலுவூட்டல் தொடர்பாக இணைந்து செயற்படும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் சமூக நிறுவனங்கள், பெண்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை எப்படியாக முன்னெடுக்க வேண்டும் என்ற உபாயங்களையும் கலந்துரையாடல்களையும் ஊக்குவிப்பதற்கு வழிகாட்டியாக அமையும். பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினையாக உள்ளது. பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் கணிசமான அளவு அதிகரிப்பதற்கு பல காரணிகள் துணை நிற்கின்றன. உள்நாட்டுப் போர், இடப்பெயர்வுகள், ஆண்கள் வெளிநாடுகட்குச் செல்லுதல், இதனால் குடும்பங்களின் சிதைவு, போன்ற காரணிகள் பெண்களை இந்நிலைக்கு ஆளாக்கியுள்ளது. இவ்வாய்வில் அவதானிக்கப்பட்ட முக்கிய அம்சங்களாக பெண்களின் வருமானத்தில் மட்டும் தங்கி வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை, இக்குடும்பங்களின் வளப்பற்றாக்குறை, பெண் தலைமை தாங்கும் குடும்ப அங்கத்தவர்களின் வறுமை நிலை என்பன குறிப்பிடக்கூடிய அவதானிப்புக்களாக உள்ளன. கிழக்கு மற்றும் தென்ஆபிரிக்கா. நாடுகளில் செய்யப்பட்ட வறுமை மதிப்பீட்டு ஆய்வுகள் கூட 25-60% மான கிராமிய குடும்பங்கள் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக உள்ளமையைக் காட்டுகின்றது. மேலும் சம்பியா, சிம்பாவே நஜீபியா நாடுகளில் செய்யப்பட்ட குடும்ப நுகர்வு ஆய்வு தரவுகள் கூட பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் வறுமை நிலையில் உள்ளதைக் காட்டுகின்றன. 1995 இல் எட்டப்பட்ட நான்காவது உலக பெண்கள் மாநாட்டின் செயற்திட்ட அறிக்கையில், சகல பெண்களுக்கும் சமத்துவமான அபிவிருத்தி சமாதானம் என்ற நோக்கில் அமைந்த இலக்குகள் சரியான வகையில் அணுகப்பட்டுள்ள நிலையிலேயே பெண்களின் சமத்துவமான நிலையில் முன்னேற்றம் காணப்படும் என தெரிவிக்கின்றது.

மகளிர் அபிவிருத்தி நிலையம் போரின் பின் ஏற்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் கணிசமான அதிகரிப்பு, இவற்றிற்கான காரணங்கள், சமூக

மேம்பாடு, வாழ்வாதாரம் என்பவற்றில் பெண்களின் வகிபாகம் மற்றும், இவ்வாறான குடும்ப பெண்களின் வலுவூட்டல் செயற்பாடு என்பவற்றை இவ்வாய்வு மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளது. இவ்வறிக்கை தெரிவிக்கும் ஆய்வு செயற்பாடுகள், இவ்வாறான குடும்ப பெண்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்த வுள்ள நிறுவனங்களிற்கு வழிகாட்டியாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

இவ்வறிக்கை தயாரிப்பதற்கு கள ஆய்வாளர்களாக செயற்பட்ட யாழ்பாண பல்கலைகழக மாணவர்கள் திரு அலோசியஸ் நிதர்சன், திரு. ஜெயம் ஜெகன் அவர்கட்கும், ஆலோசனை வழங்கிய எஸ். நவமோகனா அவர்கட்கும். அனுசரணை வழங்கிய Fokus நிறுவனத்திற்கும் எமது நன்றிகள்.

**சரோஜா சிவசந்திரன்.**

# வடமாகணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பான ஆய்வு

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பற்றிய ஆய்வின் அவசியம் ஏன் ஏற்பட்டது என்ற கேள்வியை பலர் முன்வைக்கலாம். உள்நாட்டுப் போர் முடிவடைத்து, மீள்குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டு வரும் நிலையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சவால்கள், அபிவிருத்தியை நோக்கி நகரும் மக்களின் எதிர்பார்ப்புக்களில் பெண்களின் பின்னடைவு, அரசியலில் பெண்கள் புறக்கணிக்கப்படல் போன்ற காரணிகளினால் ஏராளமான பெண்கள் குடும்பப் பொறுப்புகளின் சுமைகளோடு வறுமை நிலையில், மன உழைச்சலோடு வசித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் மேலும் ஓர் ஒருங்கிணைந்த கலந்துரையாடலை ஊக்குவித்து, கொள்கை வகுப்போர் மத்தியில், இக்குடும்பங்கள் தொடர்பான திடமான ஓர் தீர்வை முன்வைப்பதற்கு வாய்ப்பாக அமையும். பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது இன்று ஆய்வாளர்கள், அரசியல் வாதிகளின் கவனத்தை இவர்கள் பக்கம் திருப்பியுள்ளது.

# 1.0 சமூகத்தின் அடிப்படை சமூக பொருளாதார அலகான பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

குடும்ப அமைப்பியல் முறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் நாட்டின் மொத்த குடித்தொகை மட்டத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதாக உள்ளது. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, அமைப்பு என்பவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக பொருட்கள், மற்றும் சேவைகளின் விநியோகத்தில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதோடு பொது நிறுவனங்கள் குறிப்பாக பாடசாலைகள், வீட்டுத் திட்டங்கள், சுகாதார உட்கட்டமைப்புக்கள் யாவற்றையும் திட்டமிடு வதிலும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

அண்மைக் காலத்தில் புதிய வகையான குடும்ப அமைப்பு முறை ஒன்று உருவாகியுள்ளது. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் தோற்றப்பாடு உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்துள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப் பதற்கும் பல காரணங்கள் உள்ளன. தற்போது ஏற்பட்டு வரும் பொருளாதார மாற்றங்கள், சமூக அழுத்தங்கள் என்பவற்றையும் காரணங்களாகக் கூறலாம். உலக நாடுகளில் இவ்வாறு அதிகரித்து வரும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் காரணமாக தலைமைப் பொறுப்பேற்கும் பெண்கள், அவர்களது குடும்பங்களில் முக்கியமானவர்களாக கருதப்படுவதோடு பெண்கள் சார் பிரச்சினைகளில் இவர்களது பங்கு கணிசமான முக்கியத்துவத்தை கொடுத்துள்ளது.

# 2.0 பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

**வரைவிலக்கணம்:**

குடும்பம் (family) மற்றும் குடும்ப அலகு (Household) ஆகிய இரு குடும்ப அமைப்புகளிலும் வேறுபாடுகள் உள்ளன. குடும்பம், ஓர் சமூக நிறுவனம் ஆகும். இதன் தனித்துவமான செயற்பாடாக வாரிசுகளை உருவாக்குதல் அடங்குகின்றது. குடும்ப அலகு என்று கூறும் போது இது ஓர் வதிவிட அலகாக பொருளாதார உற்பத்தி, நுகர்வு, சொத்துரிமை, குழந்தைகளைப் பராமரித்தல், மற்றும் வாழிட ஒழுங்கு முறைமைகள் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் அமைவதாக உள்ளது. இது குடும்பத்துடன் இசைவானதாகவோ அன்றி இசைவில்லாததாகவோ இருக்கலாம்.

குடும்பத்தின் தலைமை, பெரும்பாலும் குடும்பத்தில் அல்லது குடும்ப அலகில் அதிக அதிகாரம் கொண்ட நபருக்கே உரித்தாகின்றது. குடும்பத்தின் பொதுவான விவகாரங்களில், தீர்மானம் எடுத்தல் உட்பட குடும்பத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட குடும்ப அங்கத்தவரே குடும்ப தலைவராக கொள்ளப்படுகின்றது. ஆயினும் பெண்கள், இயல்பாகவே குடும்பத்தின் உள்ளா

ர்ந்த தலைவர்களாக தமது பங்கை ஆற்றி வருகின்ற போதிலும், கள ஆய்வு மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் குடும்பத் தலைமை பொதுவாக ஆண்களிடமே உள்ளதை அவதானிக்க முடிந்தது. இங்கு பொருளாதார பங்களிப்பு எப்படி இருந்த போதிலும், குடும்பத்தின் தலைமை பொறுப்பு ஆண்களிடமே உள்ளதை காண முடிந்தது. பொதுவாக பெண்கள் குடும்பப் பொறுப்புக்களை தலைமை ஏற்று நடத்தும் போது குடும்பம் சரியான வழிநடத்தல் இல்லாது பிள்ளைகளின் அபிவிருத்தியில் பலவித உளவியல் தாக்கங்களை ஏற்படுத்து வதாகவும் உள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பாக மேற்கொண்ட வரைவிலக்கணம், இவ்வாய்விற்கும் பொருத்த மானதாக அமைந்துள்ளதால் அவ்வரைவிலக்கணமே இங்கும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.அதாவது குடும்பத்தில் பெண் ஒருவர் மணப்பிரிகை, கணவனை விட்டுப் பிரிந்திருத்தல், வெளிநாடு செல்லுதல், திருமணமாகாமை, கணவன் இறத்தல், அன்றி கணவன் இருந்த போதிலும் குடும்ப வருமானத்தில் பங்கு கொள்ளாமை பொன்ற காரணங்களினால் தனியாக குடும்ப சுமையை ஏற்க நேரிடுகின்றது. இக்காரணங்கள் யாவும் ஓர் குடும்பச் சூழலில் இடம்பெறும் நிகழ்வுகளாக இருந்த போதிலும், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சடுதியாக அதிகரிப்பதற்கு ஆண்கள் வெளிநாடுகட்கு செல்லுதல், உள்நாட்டுப் போர் காரணமாக ஆண்கள் இறத்தல் மணப்பிரிகை குடும்ப சிதைவுகள் போன்றவையும் பிரதான காரணங்களாக அமைகின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அதிகரிப்பு வேறு பல சமூக காரணங்களால் வேறுபடுகின்றது. ஐரோப்பா போன்ற நாடுகளில் ஆண்களை விட பெண்கள் 60 வயதிற்கும் மேலாக வாழ்கின்றனர். அத்துடன் திருமணமாகாது தனித்து வாழும் பெண்கள் சமூக ரீதியில் அங்கீகாரம் பெற்றுள்ளனர். இந் நிலை எமது ஆய்வுக்குட்பட்ட பிரதேசத் தில் காணப்படாமை குறைபாடாகவே இனங்காணப்பட்டுள்ளது. குறிப்பாக வடமாகாணத்தை பெரும்பான்மையாக கொண்டுள்ள தமிழ் சமூகத்தினரின் மத்தியில் பெண்களின் திருமணம் , திருமணத்திற்காக வழங்கப்படும் சீதனம் என்பன இளம் பெண்களின் திருமணத்தை பிற்போட வைத்துள்ளது. இதனால் திருமண வயதை கடந்த பல பெண்கள் கணிசமான அளவு பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையில் இடம் பிடித்துள்ளனர். மேலும் உள்நாட்டில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக கணவன்மாரை இழந்த பெண்கள் தொகை எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது. குடும்பத்தில் கணவனை மட்டுமல்ல, தாய், தந்தை, இருவரையும் அல்லது அவர்களில் ஒருவரை இழந்த பிள்ளைகளின் பொறுப்பு, உடல் ஊனமுற்ற, காயப்பட்டவர்களைப் பராமரித்தல், முதியவர்களின் பாதுகாப்பு பெண் தலைமைத்துவ குடும்பங்கட்கு பொறுப்புக்கள் அதிகமாகவே உள்ளன.

வடபகுதியில் தோன்றியுள்ள காணிப் பிரச்சினை பாரிய மனிதாபிமானப் பிரச்சினையாக மாறியுள்ளது. வடபகுதியில் இடப்பெயர்வு காரணமாக காணி இழந்தவர்கள், வழக்காற்றுச் சட்டமான தேசவழமைச் சட்டத்தின் ஆளுகைக் குட்பட்ட பெண்கள், இவர்களது காணிகளைக் கண்டுபிடித்து, உறுதிப்படுத்தி அக்காணிகளை அவர்களிடம் ஒப்படைப்பது என்பது, பெண்களுக்கு பிரச்சினையான விடயமாக உள்ளது. இவையாவும் பெண்தலைமைத்துவக் குடும்பங்கட்கு மேலதிக சுமையாக உள்ளது.

## 3.0 தீர்வுக்கான உபாயங்களும் முன்மொழிவுகளும்

இலங்கையில், வடமாகாணத்தில் ஏற்பட்ட போர் நிலமைகள் காரணமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளதை தரவுகள் காட்டுகின்றன. ஆயினும் இப்பிரதேசங்களில் வசிக்கும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் பொருளாதாரப் பிரச்சினைகட்கு அப்பால் வேறு பல சமூகப் பிரச்சனைகட்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. மனிதாபிமான அடிப்படையில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அரச சமூக சேவை திணைக்களத்தின் உதவிகளையும் பெற்றுக்கொள்கின்றனர். ஆயினும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் இவ்வுதவிகட்கு அப்பால் இடப்பெயர்வின் அவலங்கள், மீள் குடியேற்றத் தின் போது தமது வாழ்வாதார உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதில் ஏற்படும் சிரமங்கள் யாவும் நீண்ட கால அபிவிருத்தியில் இடைவெளிகளாகவே உள்ளன.

## 4.0 அரசாங்கம் முன்னெடுத்து வரும் வறுமை ஒழிப்புத்திட்டங்கள்

அரசின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் கணவனை இழந்த பெண்கள், இடம் பெயர்ந்த மக்களுக்கான உடனடி நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. 2002ஆம் ஆண்டில் நிவாரணம் புனர்வாழ்வு, நல்லிணக்கம் என்பவற்றை முன்னெடுக்கும் நோக்கோடு அரசு வகுத்துள்ள தேசிய சட்டகம் அரசு இடம் பெயர்ந்த மக்களுக்காக வகுத்துள்ள கொள்கையை முன்னெடுத்துச் செல்லுகின்றது. இன்று அபிவிருத்தி செயற்பாடுகளை இணைத்து செயற்படக் கூடிய பல திட்டங்கள் நடைமுறையில் இருந்த போதிலும் மீள் கட்டமைப்பு, சமூகப் பாதுகாப்பு, அபிவிருத்தி தொடர்பாக பல இடைவெளி, பிரதேச மட்டத்தில் இருந்து வருகின்றது. மக்கள் மத்தியில் தகவல்கள் பரிமாற்றம் மற்றும் இணைந்து செயற்படும் செயற்பாடுகள் தேசிய மட்டத்தில் ஊக்குவிக்கப்படுவது, இடர்படும் மக்களுக்கு நன்மை அளிப்பதாக அமையும்.

### 4.1 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பான சரியான தரவுகளை திரட்டுதல்

உள்நாட்டுப் போர் முடிவடைந்த நிலையில் இடம்பெயர்ந்து பல பிரதேசங்களில் அகதிகளாக இருந்த மக்கள் மீள் குடியேற்றம் இடம் பெறும் போது தமது பிரதேசங்கட்கு திரும்பி வருவதில் ஆர்வம் காட்டுகின்றனர். தமது அடையாளங்களையும், ஆவணங்களையும், உறுதிப்படுத்தியோர் பிரச்சனைகளை எதிர்கொள்ளாது மீள்குடியேறியுள்ளனர். கணவன்மாரை இழந்த பெண்கள், கணவன் மற்றும் பிள்ளைகள் காணமற்போனோர், ஆவணங்களை தொலைத்தோர் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியேறுவதில் பல தடங்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். தேச வழமைச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட பெண்கள் ஆண்கள் போரில் இறந்த பின் அவர்களுடைய சம்மதமின்றி காணி உரிமை மாற்றம் பெறுவதற்கு பல சிரமங்கள் உள்ளன. கணவன் இறந்ததற்கான மரணச்சான்றிதழ் பெற வேண்டும். கணவன்காணமற்போயிருந்தால், பல காலங்கள் (ஏழு வருடம்) காத்திருக்க வேண்டும். இத்தகவல்கள் தொடர்பாக எவ்வித சரியான தரவுகளும் இதுவரை பதிவுகளாக இல்லை. பிரதேச செயலகங்களில் பதிவுகள் உள்ளன. இவற்றில் சகலரதும் தரவுகள் உள்ளனவா என்பது ஆராயப்பட வேண்டும். ஆகவே மகளிர் அபிவிருத்தி நிலையம், வட மாகாணத்தில் பிரதேச செயலகமட்டத்தில் பெறப்பட்ட தரவுகளை ஒருங்கமைத்து கணனியில் பதித்து பெண் தலைமைத்துவ குடும்பங்ளை பகுப்பாய்வு செய்து அவர்களது தேவைகளை இனம்கண்டுள்ளது. இத்தகவல்கள் எமது ஆய்வில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன.

## 5.0 அபிவிருத்தி செயற்பாடுகளில் பெண்கள் தொடர்பான அணுகுமுறையினை ஒருங்கிணைத்தல்

அபிவிருத்தியில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சிறப்பான தேவைகளை இனம்கண்டு, அவற்றை மேம்படுத்துவதற்கான உபாயங்களை உட்புகுத்துதல் அவசியம். அவற்றை எவ்வாறு அணுகுதல் வேண்டும் என்பதை ஐ.நா சிறுவர் கல்வி நிதியம் (Unicef) சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் என்பன தமது அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளன.

## 6.0 கற்றுக்கொண்ட பாடங்கள்

### 6.1 சமூகத்தை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை

அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வகையில் அமைந்திருந்தாலும், மீள்குடியேறும் மக்கள் மத்தியில் சமூக ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும் முயற்சிகள் தேவை. பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சமூகத்தில் தனித்து விடப்படுவதால் இவ்ஒருங்கிணைப்பு அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதாக அமையும்.

### 6.2 சமாதானம், சமூக நல்லுறவை வளர்த்தல்


போரின் தாக்கங்களில் இருந்து மீண்டெழுந்த மக்கள், அதன் தாக்கங்களில் இருந்து விடுபடாத நிலையில், குடும்பங்கள், சமூகங்கள் மத்தியில் பிணக்குகள் தோன்றுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. உளத்தாக்கங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு உளவள ஆலோசனைகள் வழங்குவதன் மூலம் அமைதியை ஏற்படுத்துவதோடு, மக்களை குழுக்களாக இயக்கி, சிறுசிறு பிணக்குகளை தீர்க்கக்கூடிய வாய்ப்புக்களை வழங்குதல் அவசியம்.

# 7.0 ஆய்வு முறைமை (Methodology)

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பான ஆய்வு வடமாகாண பிரதேச செயலகங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளை ஆதாரமாகக் கொண்டு ஆராயப் பட்டுள்ளது. கள ஆய்விற்காக சமூக பொருளாதார அம்சங்களை அடங்கிய வினாக் கொத்து தயாரிக்கப்பட்டு மூன்று பிரதேச செயலக பிரிவுகளாகிய முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில், ஒவ்வொரு பிரதேசத்திலும் 250 மாதிரி ஆய்வுகள் மூலம் கள/குடும்ப நிலமைகள் பெறப்பட்டன. இத்தரவுகளை பகுப்பாய்வு செய்து, இம்மாதிரிகளின் அடிப்படையில் வடமாகாணத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூகபொருளாதார, பங்களிப்புக்கள், அவர்களின் வாழ்வியல் முறைமைகள் இவ்வறிக்கையில் ஆராயப்பட்டுள்ளது.

## வடமாகாணத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்

| மாவட்டங்கள் | பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 29378 |
| வவுனியா | 5802 |
| மன்னார் | 6888 |
| முல்லைத்தீவு | 6294 |
| கிளிநொச்சி | 6170 |
| மொத்தம் | 54532 |





## 01. யாழ்ப்பாணம்

**பிரதேச செயலக ரீதியாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் தொகை**

| இல | பிரதேச செயலக பிரிவு | தொகை |
|---|---|---|
| 01 | ஊர்காவற்துறை | 626 |
| 02 | காரைநகர் | 834 |
| 03 | தெல்லிப்பளை | 1855 |
| 04 | யாழ்ப்பாணம் | 2223 |
| 05 | சாவக்சேரி | 3089 |
| 06 | உடுவில் | 2024 |
| 07 | நல்லூர் | 2351 |
| 08 | வேலணை | 1289 |
| 09 | சங்கானை | 3246 |
| 10 | மருதங்கேணி | 765 |
| 11 | பருத்தித்துறை | 2522 |
| 12 | சண்டிலிப்பாய் | 1773 |
| 13 | கரவெட்டி | 2667 |
| 14 | நெடுந்தீவு | 250 |
| 15 | கோப்பாய் | 3864 |
| | **மொத்தம்** | **29378** |

மூலம்:- மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
யாழ் மாவட்ட பிரதேச செயலகங்கள்




## பெண்கள் தலைமை தாங்குவதற்கான பிரதான காரணங்கள்

- ❖ போர்
- ❖ கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல்
- ❖ கணவனின் அங்கவீனம்
- ❖ கணவனை பிரிந்திருத்தல்
- ❖ கணவன் தடுப்பில் இருத்தல்
- ❖ கணவன் வெளிநாட்டில் இருத்தல்
- ❖ கணவனின் மரணம்
- ❖ கணவனின் போதைவஸ்து பாவனை
- ❖ திருமணம் முடிக்காமை
- ❖ குடும்ப வருமானத்தில் கணவனின் பங்களிப்பு இன்மை.

## பகுப்பாய்வு

- ❋ பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அதிகூடிய பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்றன.
- ❋ இரண்டாவது இடத்தில் நல்லூர் பிரதேச செயலகம் காணப்படுகின்றது.
- ❋ ஆகக்குறைந்த பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் கொண்ட பிரதேச செயலகமாக கரவெட்டி பிரதேசசெயலகம் மற்றும் காரைநகர் பிரதேச செயலகம் காணப்படுகின்றது.

- யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் பிரதேச செயலகத்தில் கிட்டத்தட்ட ஒரேயளவான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்றன. (யாழ்ப்பாணம் - 1013 உடுவில் பிரதேச செயலகம் - 1011)
- பருத்தித்துறை பிரதேசத்தில் அதிகமான பெண்கள் தலைமை தாங்குவதற்கான காரணம் போரின் ஆரம்பக் கட்ட பாதிப்புக்கள் ஆகும்.
- மேலும் யாழ்ப்பாணத்தில் கரையோர பிரதேசத்தில் ஆண்கள் சட்டவிரோதமாக வெளிநாட்டிற்கு செல்வதும், கடல் தொழிலுக்கு செல்லும் போது காணாமல் போகும் செயற்பாடும் முக்கிய பாதிப்பை ஏற்படுத்து கின்றது.
- மிக முக்கிய காரணமாக மத்தியகிழக்கு நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் தொழில்வாய்ப்பின் நிமித்தம் சென்றமை காரணமாக கூடுதலான பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.
- யாழ்பிரதேசத்தை சேர்ந்த ஆண்கள் பாதுகாப்பு மற்றும் தொழில் நிமிர்த்தம் காரணமாக வன்னி பிரதேசத்திற்கு சென்று இறுதியுத்தத்தில் மரண மடைந்தமை மற்றும் அங்கவீனம் அடைந்தமை.
- வெள்ளைவான் கடத்தல், காரணமின்றி சட்டவிரோதமாக கொலை செய்யப்படுதல் மற்றும் கொலைஅச்சுறுத்தல் காரணமாக பெரும்பாலான பெண்கள் தலைமை தாங்கும் சூழல் காணப்படுகின்றது.
- கடன் தொல்லை பிரச்சனையால் பல ஆண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளமையால் பெண்கள் தலைமை தாங்கும் சூழல் காணப்படுகின்றது.
- பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசரகால சட்டம் காரணமாக பல ஆண்கள் சிறைவைக்கப்பட்டு, இன்றுவரை விடுவிக்கப்படாதமையினால் பெண்கள் தமது குடும்பங்களைத் தலைமை தாங்கும் நிலை காணப்படுகின்றது.
- ஆண்கள் வன்செயல்கள் காரணமாக கொல்லப்பட்டுள்ளமையும் (செம்மணிப் படுகொலை) பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்தமைக்கு காரணமாக அமைந்துள்ளது.

## கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்களும், தீர்வு காணப்பட வேண்டிய விடயங்களும்

- தடுப்பில் உள்ள ஆண்களை விடுவிப்பதற்கு (பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள்) நடவடிக்கை எடுத்தல்.
- காணமல் போன கணவன்மாரை மனித உரிமை ஆணைக்குழுவின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கை எடுத்தல்
- ஊனமுற்ற கணவன்மார்களுக்கு செயற்கை அவயங்களைப் பொருத்துதல் (ஜெய்ப்பூர் நிறுவன உதவி பெறல்)


- கணவனை இழந்தவர்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், காப்புறுதி திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்களைத் திட்டமிடுதலும், நடைமுறைப்படுத்தலும்.
- சமூக மாற்றத்தினைக் கருத்திற் கொண்டு வயது முதிர்ந்த பெண்கள், மனஅழுத்தத்திற்குள்ளான பெண்கள், தனித்து வாழும் பெண்களிற்கு உளவள ஆற்றுதல் வழங்கல்.
- குடிபோதைக்கு அடிமையாகி அதிகமான ஆண்கள் இறப்பதனால் அதனைத் தடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சுயதொழில் பயிற்சிகளை வழங்குதல், நிதி, கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். (அரச, அரசசாரபற்ற நிறுவன உதவிகள்)
- சமூக, பொருளாதார ரீதியாக பெண்களை வலுப்படுத்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- பெண்களுக்கான கற்றல் செயற்பாடுகளுக்கு விசேட புலைமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- சிவில் சமூக அமைப்புக்கள் மூலம் பாதிக்கப்பட்ட பெண்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தலும், வாழ்வாதார செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தலும்.
- படுகொலைகள் செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு, உரிய நிவாரணங்களையும் சட்ட உதவிகளையும் பெற்றுக்கொடுத்தல்.

## 02. முல்லைத்தீவு

**பிரதேச செயலக ரீதியாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் தொகை**

| இல | பிரதேச செயலக பிரிவு | தொகை |
|---|---|---|
| 01 | கரைதுறைப்பற்று | 1528 |
| 02 | புதுக்குடியிருப்பு | 1756 |
| 03 | மாந்தை கிழக்கு | 591 |
| 04 | ஒட்டிசுட்டான் | 1051 |
| 05 | துணுக்காய் | 860 |
| 06 | மணலாறு (வெலிஓயா) | 508 |
| | மொத்தம் | **6294** |

மூலம்:- மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்,முல்லைத்தீவு பிரதேச செயலகம்




## பெண்கள் தலைமைக்கான காரணங்கள்

- கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல்
- கணவன் ஊனமுற்றிருத்தல்
- கணவனைப் பிரிந்திருத்தல்
- கணவன் கைது, காணமல் போதல்
- கணவன் வெளிநாடு செல்லுதல்
- கணவனின் மரணம்
- கணவன் போதைக்கு அடிமையாதல்
- யுத்த இழப்பு

## பகுப்பாய்வு

- கரைதுறைப்பற்று பிரதேசத்தில் அதிகூடிய பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்றது.
- இரண்டாவது இடத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசம் காணப்படுகின்றது.

- மிகக்குறைந்த பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் கொண்ட பிரதேசமாக மணலாறு (வெலிஓயா) பிரதேசம் காணப்படுகின்றது.
- பெண்கள் தலைமை தாங்குவதற்கு 90% மான காரணமாக, இங்கு போர் நிலைமை காணப்படுகின்றது. ஏனெனில் குறிப்பாக 2006-2009 இல் மேற்கொள்ளப்பட்ட யுத்தநடவடிக்கை காரணமாக பல்லாயிரக் கணக்கான ஆண்கள் பாதிக்கப்ட்டனர். இதனால் பெண்கள் தலைமை தாங்கும் நிலை காணப்படுகின்றது.
- ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர் கட்டாயம் யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய நிலையினால் கூடுதலான ஆண்கள் போரில் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அதிகமான பெண்கள் கணவனை இழந்துள்ளனர்.
- மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாளில் இருந்து 06 மாத காலத்திற்கு சிறுகுற்றங்கள் மன்னிக்கப்பட்டமையால் கசிப்புபாவனை அதிகரித்து, ஆண்கள் இதற்கு அடிமையாகியதால் பெண்கள் குடும்பத்தில் தலைமை தாங்கும் சூழல் ஏற்பட்டது.
- உளவியல் பாதிப்பு காரணமாக ஆண்கள் போதைவஸ்துக்கு அடிமை யாகியதால் பெண்கள் குடும்பத்தில் தலைமை தாங்கும் சூழல் ஏற்பட்டது.
- புதுக்குடியிருப்பு மற்றும் மருமேற்பற்று பிரதேச செயலகம் கூடுதலாக பாதிக்கப்பட்டமைக்கு முக்கிய காரணம் இறுதிக்கட்ட யுத்தத்தின் இறுதி பிரதேசமாக இவை காணப்பட்டது. குறிப்பாக ஆனந்தபுரம், புதுமாத்தளன் மற்றும் முள்ளிவாய்க்கால் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களாக அவதானிக்க ப்பட்டுள்ளது.

## கவனிக்கப்பட வேண்டிய மற்றும் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள்

- காணாமல் போன கணவன், பிள்ளைகளை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு /சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆனைக்குழுவிற்கு முறையிடுதல்.
- அங்கவீனமுடையவர்களுக்கு செயற்கை அவயங்களை பொருத்துதல். (ஜெய்ப்பூர் நிறுவன உதவியினை பெற்றுக்கொள்ளலாம்)
- கணவனை இழந்தவர்களுக்கான காப்புறுதி திட்டங்களை வலுவூட்டுதல்.
- பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்களை வழங்குதல்.
- போதைவஸ்து பாவனையால் (கசிப்பு உற்பத்தி) கணவர் இறப்பதனால் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்க்கொள்ளல். குறிப்பாக மதுசார சட்டபூர்வமற்ற அனுமதிபத்திரங்களை வழங்குவதை தடுத்தல்.
- பெண்களுக்கான விசேடதொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல். குறிப்பாக PARCIC நிறுவனம் மூலம் தொடர்பு கொண்டு தையல் பயிற்சிகளையும் கடலுணவுகளை பதனிடுவதற்கான பயிற்சிகளையும் வழங்குதல்.


- சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பெண்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- கல்விபெற்றுக்கொள்வதற்காக பெண்களுக்கான விசேட புலைமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- சிவில் சமூக அமைப்புக்களை அமைத்து பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல். குறிப்பாக இராணுவ கெடுபிடிகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.
- இரகசிய தடுப்பில் உள்ள முன்னாள் போராளிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- குடியேற்ற காணிகளில் உள்ள இராணுவ வலயங்களை அகற்றுதல்.
- விடுதலைப்புலிகள் பயன்படுத்தி இராணுவம் தற்போது கைவசப்படுத்தியுள்ள விவசாய காணிகளை மக்கள் நலனுக்கு பயன்படும் விதத்தில் ஒப்படைத்தல்.
- முற்றுமுழுதாக கண்ணிவெடி அகற்றப்பட்டதற்கான சான்றிதழ்களை பெறுதல்.
- பெண்கள் அரசியல் ரீதியாகவோ நிர்வாக ரீதியாகவோ உயர் பதவிகளில் இருப்பதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல்.

## 03. கிளிநொச்சி

**பிரதேச செயலக ரீதியாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் தொகை**

| இல | பிரதேச செயலக பிரிவு | தொகை |
|---|---|---|
| 01 | பூநகரி | 952 |
| 02 | பச்சிலைபள்ளி | 247 |
| 03 | கண்டாவளை | 1188 |
| 04 | கிளிநொச்சி | 3783 |
| | மொத்தம் | 6170 |

மூலம்: - மாவட்டச் செயலகம் கிளிநொச்சி




## பெண்கள் தலைமை தாங்குவதற்கான பிரதான காரணங்கள்

- போர்
- கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல்
- கணவனின் அங்கவீனம்
- கணவனை பிரிந்திருத்தல்
- கணவன் தடுப்பில் இருத்தல்
- கணவன் வெளிநாட்டில் இருத்தல்
- கணவனின் மரணம்
- கணவனினன் போதைவஸ்து பாவனை(குறிப்பாக கசிப்பு)

## பகுப்பாய்வு

- கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் அதிகூடிய பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்றது.
- இரண்டாவது இடத்தில் கண்டாவளை பிரதேச செயலகம் காணப்படுகின்றது.
- ஆகக்குறைந்த பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் கொண்ட பிரதேச செயலகமாக பச்சிலைபள்ளி பிரதேச செயலகம் காணப்படுகின்றது.
- பெண்கள் தலைமை தாங்குவதற்கான 90% ஆன காரணமாக இங்கு போர் காணப்படுகின்றது. ஏனெனில் குறிப்பாக 2006-2009 இல் மேற்க் கொள்ளப்பட்ட யுத்தநடவடிக்கை காரணமாக பல்லாயிரகணக்கான ஆண்கள் பாதிக்கப்பட்டனர் இதனால் பெண்கள் தலைமை தாங்கும் சூழல் காணப் படுகின்றது.
- ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர் கட்டாயம் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கூடுதலான ஆண்கள் போரினால் காணாமல் / இறந்து போயுள்ளனர். இதனால் அதிகமான பெண்கள் கணவனை இழந்துள்ளனர்.
- மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாளில் இருந்து 06 மாத காலத்திற்கு சிறுகுற்றங்கள் மன்னிக்கப்பட்டமையால் கசிப்புபாவனை அதிகரித்து ஆண்கள் இதற்கு அடிமையாகி பெண்கள் தலைமை தாங்கும் நிலை ஏற்பட்டது.
- யுத்தத்திற்கு பின் மிக முக்கிய காரணமாக மத்தியகிழக்கு நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும்(குறிப்பாக அவுஸ்ரேலியா) தொழில்வாய்ப்பின் நிமித்தம் ஆண்கள் சென்றமை காரணமாக கூடுதலான பெண்கள் குடும்பங்களை தனியாக தலைமை தாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.
- உளவியல் பாதிப்பு காரணமாக ஆண்கள் போதைவஸ்துக்கு அடிமையாகியதால் பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கும் நிலை ஏற்பட்டது.


## கவனிக்கப்பட வேண்டிய மற்றும் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள்

- காணாமல் போன கணவன்/ பிள்ளைகளை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு/ சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட காணாமல் போனோரை தேடுவதற்கான ஆணைக்குழுவிற்கு முறையிடுதல்.
- உளவியல் ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்க்கொண்டு சமூக நீரோட்டத்துடன் பாதிக்கப்பட்டவர்களை இணைத்தல்.
- அங்கவீனமுடைய கணவன்மார்களுக்கு செயற்கை அவயங்களை பொருத்துதல் (ஜெய்ப்பூர் நிறுவன உதவியினை பெற்றுக்கொள்ளலாம்)
- கணவனை இறந்தவர்களுக்கான காப்புறுதி திட்டங்களை வலுவூட்டுதல்.
- பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்களை வழங்குதல்.

- போதைவஸ்து பாவனையால் (கசிப்பு உற்பத்தி) அதிகமான கணவர்மார் இறப்பதனால் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். குறிப்பாக மதுசார சட்டபூர்வமற்ற அனுமதிபத்திரங்களை வழங்குவதை தடுத்தல்.
- பெண்களுக்கான விசேடதொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் குறிப்பாக PARCIC நிறுவனம் மூலம் தொடர்பு கொண்டு தையல் பயிற்சிகளையும் கடலுணவுகளை பதனிடுவதற்கான பயிற்சிகளையும் வழங்குதல்.
- சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பெண்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- கல்விபெற்றுக்கொள்வதற்காக பெண்களுக்கான விசேட புலைமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- சிவில் சமூகங்களை அமைத்து பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் குறிப்பாக இராணுவ கெடுபிடிகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.
- இரகசிய தடுப்பில் உள்ள முன்னாள் போராளிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- குடியேற்ற காணிகளில் உள்ள இராணுவ வலயங்களை அகற்றுதல்.
- விடுதலைப்புலிகள் பயன்படுத்தி இராணுவம் தற்போது கைவசப்படுத்தியுள்ள விவசாய காணிகளை மக்கள் நலனுக்கு பயன்படும் விதத்தில் ஒப்படைத்தல்.
- முற்றுமுழுதாக கண்ணிவெடி அகற்றப்பட்டதற்கான சான்றிதழ்களை பெறுதல்.
- பெண்கள் அரசியல் ரீதியாகவோ நிர்வாக ரீதியாகவோ உயர் பதவிகளில் இருப்பதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல்.
- இளவயது திருமணம் செய்து கணவர்களை இழந்தவர்களுக்கு மறுதிருமணம் பற்றிய ஆலோசனையை பெற்றுக்கொடுத்தல்.

## 04. மன்னார் மாவட்டம்

| இல | பிரதேச செயலக பிரிவு | தொகை |
|---|---|---|
| 01 | முசலி | 881 |
| 02 | மாந்தை மேற்கு | 1121 |
| 03 | நானாட்டான் | 1235 |
| 04 | மடு | 514 |
| 05 | மன்னார் நகர் | 3137 |
| | மொத்தம் | 6888 |




மூலம்: - மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
மன்னார் பிரதேச செயலகம்

## மன்னார் மாவட்டங்களில் பெண்கள் தலைமை தாங்குவதற்கான காரணங்கள்

- கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல்
- கணவனின் அங்கவீனம்
- கணவனை பிரிந்திருத்தல்
- கணவன் தடுப்பில் இருத்தல்
- கணவன் வெளிநாட்டில் இருத்தல்
- கணவனின் மரணம்
- கணவனின் போதைவஸ்து பாவனை
- இடப்பெயர்வின் போது காணாமல் போனமை.

## பகுப்பாய்வு

- மன்னார் பிரதேசத்தில் அதிகமான பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்குவற்கான காரணம் போரின் ஆரம்பகட்ட பாதிப்புக்கள் ஆகும்.
- மேலும் மன்னார் கரையோர பிரதேச ஆண்கள் சட்டவிரோதமாக வெளிநாட்டிற்கு செல்வதும் தொழிலுக்கு செல்லும் போது காணாமல் போகும் செயற்பாடும் முக்கிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
- மிக முக்கிய காரணமாக மத்தியகிழக்கு நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் தொழில் வாய்ப்பின் நிமித்தம் சென்றமை காரணமாக கூடுதலான பெண்கள் குடும்பத்தில் தலைமை தாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.
- மன்னார் பிரதேசத்தை சேர்ந்த ஆண்கள் பாதுகாப்பு மற்றும் தொழில் நிமித்தம் வன்னி பிரதேசத்திற்கு சென்று இறுதியுத்தத்தில் மரணமடைந்தமை மற்றும் அங்கவீனம் அடைந்தமை.

* வெள்ளைவான் கடத்தல், காரணமின்றி சட்டவிரோதமாக கொலை செய்யப்படுதல் மற்றும் கொலைஅச்சுறுத்தல் காரணமாக பெரும்பாலான பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கும் நிலை காணப்படுகின்றது.
* கடன் தொல்லை பிரச்சனையால் பல ஆண்கள் தற்கொலை செய்து கொண்ட காரணத்தால் பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கும் நிலை காணப் படுகின்றது.
* பயங்காரவாத தடை சட்டம் மற்றும் அவசரகால சட்டம் காரணமாக பல ஆண்கள் சிறைவைக்கப்பட்டு, இன்றுவரை விடுவிக்கப்படாத நிலை காரணமாக பெண்கள்குடும்பத்தை தலைமை தாங்கும் நிலை காணப் படுகின்றது.
* ஆயுதகுழுக்களுக்கு இடையில் மேற்க்கொள்ளப்பட்ட மோதலில் பல ஆண்கள் கொல்லப்பட்டமை. (குறிப்பாக புளொட் மற்றும் ஈ.பி.டி.பி குழுக்களுக்கிடையில் மேற்க்கொள்ளப்பட்ட மோதல்)
* அத்துமீறிய மீன்பிடி மற்றும் வேறு காரணங்களை காட்டி இலங்கை இந்திய கடற்படையினரால் தாக்கப்படுதல் மற்றும் கொலைசெய்யப்படுதல் காரண மாக பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கும் நிலை காணப்படுகின்றது.
* இராணுவத்தினரால் பலவந்தமாக பிடிக்கப்பட்டு கொலை செய்யப் படுதல்(குறிப்பாக மன்னாரில் தள்ளாடி முகாமில் கொண்டுசென்று கொலை செய்தல்) பெண்கள் குடும்பங்களுக்கு தலைமை தாங்கும் கட்டாயம் காணப்படுகின்றது.
* இயற்கை அனர்த்தனங்களினால் ஆண்கள் இறக்கின்ற காரணத்தினாலும் பெண்கள் தலைமை தாங்கும் நிலை காணப்படுகின்றது.


## கவனிக்கப்பட வேண்டிய மற்றும் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள்

* தடுப்பில் உள்ள ஆண்களை விடுவிப்பதற்கு (பயங்கரவாத தடை சட்டம் காரணமாக பல ஆண்கள் சிறைவைக்கப்பட்டமையும் இன்றுவரை விடுவிக்கப்படாமையும்) நடவடிக்கை எடுத்தல்.
* காணாமல் போன கணவன் / பிள்ளைகளைப் பற்றி மனித உரிமை ஆணைக்குழு/ சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு முறையிடுதல்.
* அங்கவீனமுடையவர்கட்கு செயற்கை அவயங்களை பொருத்துதல். (ஜெய்ப்பூர் நிறுவன உதவியினை பெற்றுக்கொள்ளலாம்)
* கணவனை இழந்தவர்களுக்கான காப்புறுதி திட்டங்களை வலுவூட்டுதல். (தள்ளாடி முகாமில் கொல்லப்பட்டவர்களுக்கு)
* பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்களை வழங்குதல்.

- சமூக மாற்றத்தினை கருத்தில் கொண்டு முதியவயது கொண்ட மற்றும் பாதகமான சமூக மனப்பாங்கு கொண்ட பெண்களிடம் எடுத்துக்கூறி தனிமை தன்மையை அகற்றுதல்.
- போதைவஸ்து பாவனையால் அதிகமான கணவர்மார் இறப்பதனால் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். குறிப்பாக மதுசார சட்டபூர்வமற்ற அனுமதிபத்திரங்களை வழங்குவதை தடுத்தல்.
- சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பெண்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- கல்வியை பெற்றுக்கொள்வதற்காக பெண்களுக்கான விசேட புலைமைப் பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- அனர்த்த முகாமைத்துவ நிலையங்களை அமைத்து இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு பெற்றுக்கொடுத்தல்.
- சிவில் சமூக அமைப்புக்களை அமைத்து பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் குறிப்பாக இராணுவ கெடுபிடிகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.
- முற்றுமுழுதாக கண்ணிவெடி அகற்றப்பட்டதற்கான சான்றிதழ்களை பெறுதல்.

## 05. வவுனியா மாவட்டம்

| இல | பிரதேச செயலக பிரிவு | தொகை |
|---|---|---|
| 01 | வவுனியா நகர் | 4735 |
| 02 | வவுனியா தெற்கு | 117 |
| 03 | வெங்கல செட்டிபுலம் | 696 |
| 04 | வவுனியா வடக்கு நெடுங்கேணி | 254 |
| | மொத்தம் | 5802 |




மூலம்:- மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
வவுனியா பிரதேச செயலகம்

## வவுனியா மாவட்டங்களில் பெண்கள் தலைமை தாங்குவதற்கான காரணங்கள்


- கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல்.
- கணவனின் அங்கவீனம்.
- கணவனை பிரிந்திருத்தல்.
- கணவன் தடுப்பில் இருத்தல்.
- கணவன் வெளிநாட்டில் இருத்தல்.
- கணவனின் மரணம்.
- கணவனின் போதைவஸ்து பாவனை.
- கணவன்/ பிள்ளைகள் இடப்பெயர்வின் போது காணாமல் போனமை.

## மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வை அடிப்படையாக கொண்ட தகவல்கள்

### யாழ்ப்பாணம்

**01. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களின் வயது**

| வயது | தொகை |
|---|---|
| 15 - 25 | 20 |
| 25 -35 | 24 |
| 35 - 45 | 32 |
| 45 - 55 | 36 |
| 55 - 65 | 44 |
| 65 மேல் | 44 |
| மொத்தம் | 200 |



## பகுப்பாய்வு


- பெரும்பாண்மையாக 55-65 மற்றும் 65 வயதிற்கு மேற்பட்டவர்களாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக காணப்படுகின்றனர்.
- 15-25 வரையான பெண்கள் 10% ஆக காணப்படுகின்றனர்.
- போரும் போரினால் ஏற்பட்ட விளைவுகளாலும் அதிக பெண்கள் குடும்பத்திற்கு தலைமை தாங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர்.
- கணவன் தடுப்பில் இருப்பதும் பெண் குடும்பத்தை தலைமை தாங்குவதற்கான ஒருகாரணம் ஆகும்.
- 65 வயதிற்கு மேல் பெண்தலைமைதாங்கும் குடும்பங்கள் காணப்படுவதால் பல்வேறு பிரச்சனைகளை முகங்கொடுக்கின்றனர். குறிப்பாக பராமரிப்பு பிரச்சனையை எதிர்கொள்கின்றனர்.
- போர் மட்டுமன்றி நோய்கள் இங்கு முக்கியமான காரணியாக காணப்படுகின்றது. இங்கு தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களின் தாக்கம் காணப்படுகின்றது.
- மேலும் விவாகரத்துக்கள் அதிகமாக காணப்படுவதாலும் பெண்கள் தலைமை தாங்க வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது.
- 45 வயதிற்கு உட்பட்டவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர்.

## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- 15- 25 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு மறுதிருமணங்களுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுத்தல்.
- 65 வயதிற்கு மேற்பட்டவர்களும் குடும்பங்களை தலைமை தாங்குவதால் அவர்களுக்காக விசேட திட்டங்களை உருவாக்குதல். (முதியோர் கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுத்தல்)
- பெரும்பாலும் 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பதால் முன் வைக்கப்படும் திட்டங்கள் இவர்களை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும்.
- 18 வயதிற்கு கீழ்பட்ட திருமணங்களை தடைசெய்தல். இதற்கு சமூக அமைப்புக்களின் ஒத்துழைப்பு அவசியம் ஆகும்.
- வலுக்கட்டாய திருமணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தல்.
- இளவயது திருமணங்களை பற்றி விழிப்புணர்வு செய்வதோடு அதன் தாக்கங்கள் பற்றி எடுத்துக்கூறுதல்.
- குடும்பத்தை தலைமை தாங்கும் பெண்களுக்கு தொற்றும் மற்றும் தொற்றாத நோய்களை பற்றி எடுத்துகூறுதல்.
- யாழ்ப்பாணத்தில் 65 வயதிற்கு மேல் வாழும் பெண்கள் அதிகமாக வாழ்வதற்கான காரணம் நல்ல சுகாதார பழக்கவழக்கங்கள் என குறிப்பிட முடியும்.

## 02. குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை

| எண்ணிக்கை | தொகை |
|---|---|
| 1 | 68 |
| 2 | 32 |
| 3 | 27 |
| 4 | 20 |
| 5 | 32 |
| 5மேல் | 20 |
| மொத்தம் | 200 |



## பகுப்பாய்வு


- ♥ 01 உறுப்பினரை கொண்ட குடும்பங்களே அதிகமாக காணப்படுகின்றன.
- ♥ கணவனால் மற்றும் பிள்ளைகளினால் கைவிடப்பட்டவர்களின் தொகை அதிகமாக காணப்படுவதால் பெண்கள் தனித்து வாழும் தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- ♥ போருக்கு பின்னர் குடும்பஅங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.
- ♥ போரினால் பல்வேறு இன்னல்களை அனுபவித்த பெண்கள் மேலும் தனிமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ♥ பெரும்பாலும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் பெண்உறுப்பினர்களே அதிகமாக உள்ளனர்.
- ♥ கூட்டுக்குடும்ப முறை குறைவடைந்து கொண்டுவருகின்றது.
- ♥ விவாகரத்து அதிகமாக காணப்படுவதால் பெண்கள் தனித்து வாழும் தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- ♥ பிள்ளைகள் மற்றும் உறவினர்களால் பெண்கள் கைவிடப்பட்ட தன்மை அதிகமாக காணப்படுகின்றது.

## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- பாலியல் கல்வி பற்றிய அடிப்படை விடயங்களை எடுத்துக்கூறுதல்.
- பொருளாதார உதவிகளை மேற்கொள்வதன் மூலம் பெண்களுக்கான பலப்படுத்தும் தன்மையினை உறுதிப்படுத்தல்.
- கைவிடப்பட்டவர்களுக்கான விசேடதிட்டங்கள் ஏற்படுத்த வேண்டும்.
  தனித்து வாழும் குடும்பஅங்கத்தவர்களுக்கு விசேடநல திட்டங்கள் ஏற்ப்படுத்த வேண்டும்.
- பெண்களுக்கான விசேட கல்வியை உட்புகுத்துவதற்கான வழிமுறைகளை மேற்க்கொள்ளல்.
- சமூக பொருளாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்தி கொடுக்க வேண்டும்.
- தனிமையில் பெண்கள் அதிகமாக வசிப்பதால் உளவியல் ரீதியிலான ஆலோசனைகள் வழங்கவேண்டியது கட்டாயமாகும்.
- மாலை நேர முதியவர் கலந்துரையாடல்களை ஏற்ப்பாடு செய்யலாம்.
- முதியோர் இல்லங்களில் தனித்து வாழ்வோரை இணைத்து விட வேண்டும்.

## ০৩. தலைமை தாங்குவதற்கான காரணம்

| காரணம் | தொகை |
|---|---|
| கணவனின் மரணம் | 140 |
| கணவனின் அங்கவீனம் | 04 |
| கணவனை பிரிந்திருத்தல் | 52 |
| கணவன் தடுப்பில் இருத்தல் | 04 |
| மொத்தம் | 200 |




**பகுப்பாய்வு**

- 70% ஆனவர்கள் தலைமை தாங்குவதற்கான காரணம் கணவனின் மரணம் ஆகும். (இம்மரணமானது போர், நோய், விபத்து, கொலை, தற்கொலை மற்றும் பிற காரணங்களால் ஏற்பட்டுள்ளது.) குறிப்பாக போரினாலும் கொடிய நோய்களினாலும் ஆண்கள் இறந்துள்ளனர். மேலும் இந்திய அமைதிப் படையின் நடவடிக்கையினாலும் இலங்கை இராணுவ படுகொலைகளினாலும் ஏராளமான பெண்கள் கணவன்மாரை பறிகொடுத்துள்ளனர்.
- 26.4%ஆனவர்கள் தலைமை தாங்குவதற்கான காரணம் கணவனை பிரிந் திருத்தல் ஆகும். (இதில் 70% விவாகரத்து பெறப்படவில்லை )

- 2% ஆனவர்கள் தலைமைதாங்குவதற்கான காரணம் கணவன் தடுப்பில் வைத்திருக்கப்படுதல் ஆகும்.
- யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பெரும்பாலான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் வன்னி மாவட்ட வரலாற்றுடன் தொடர்பு காணப்படுகின்றது. பல்வேறு பட்ட சமூக நாகரிக காரணிளால் விவாகரத்து மோகம் அதிகமாக காணப்படுகின்றது.
- மேலும் ஆண்கள் வேலைவாய்ப்பற்றிருப்பதும் பெண் தலைமை தாங்குவதற்கான ஒரு பிற்பட்டகால காரணியாக இங்கு காணப்படுகின்றது.

**மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- 70% ஆனவர்கள் விதவைகளாக இருப்பதால் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொடுத்தல்.
- 2% அங்கவீனமுடையவர்களாக இருப்பதால் மாற்றுவலு சாதனங்களை பெற்றுக்கொடுத்தல்.
- 26% ஆனவர்கள் கணவனை பிரிந்திருப்பதால் உளவியல் ஆற்றுப்படுத்தல் மூலம் நல்லிணக்கங்களை ஏற்படுத்தல்.
- பன்நாட்டு தொண்டு நிறுவனங்கள் மூலம் தடுப்பில் உள்ள கணவர்களை சமூகத்தில் மீள இணைத்தல். (உ.ம்.மனித உரிமை ஆணைக்குழு)
- உதவிதிட்டங்களை வழங்கும் போது பெண்தலைமை தாங்கும் குடும்பங்களை முன்வைத்து திட்டங்கள் வழங்கப்படவேண்டும்.
- பெண்கள் தலைமையினை மேம்படுத்துவதற்காக அவர்களை அரசியலில் ஈடுபடுத்தல்.
- தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கி பெண்களை வலுவூட்டுதல்.
- பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு விசேட சமூக நல திட்டங்களை வழங்குவதோடு சமூக பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

## 04. வசிப்பிடத்தின் தன்மை

| விபரம் | தொகை |
|---|---|
| நிரந்தரம் | 140 |
| தற்காலிகம் | 60 |
| மொத்தம் | 200 |




**பகுப்பாய்வு**

- 70% ஆனவர்கள் நிரந்தரவீடுகளில் வசிக்கின்றனர்.
- இது வரைக்கும் இப்பிரதேசத்தில் 100% ஆக வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படவில்லை.
- 80% கிணறுகள் வழங்கப்பட்டுள்ளது.
- மேலும் 90% மலசலகூடங்களும் வழங்கப்பட்டுள்ளது.
- 100% மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.
- தற்காலிக வீடுகளில் மக்கள் வாழ்வதற்கு பிரதான காரணம் பொருளாதார வசதிகள் குறைவாக காணப்படுகின்றமையாகும்.
- வீட்டுதிட்டங்கள் பூரணமாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.
- பொதுவான பார்வையில் அடிப்படை வசதிகள் சிறப்பான முறையில் காணப்படுகின்றது. இருப்பினும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமாக வசிக்கும் சூழல் என்ற தன்மை குறைவாகவே காணப்படுகின்றது.
- வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்கு காணிகளை நிரந்தரமாக வழங்க வேண்டும்.


**மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- அதிகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
- மலசலகூடங்கள் மற்றும் கிணறுகள் சார் பகுதி திருத்தவேலைகளுக்கும் வழங்கப்படாத பகுதிகளில் வழங்குவதற்கும் சிபார்சு செய்தல்.

- அரச, அரசசார்பற்ற நிறுவனங்களோடு ஒப்பந்தங்களை மேற்கொண்டு கொடுக்கப்படாத இடங்களில் நிரந்தர வீட்டுதிட்டங்களை பெற்றுக் கொடுத்தல். (உ-ம்: யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட 90 குடும்பங்களை கொண்ட வசந்தபுரம் எனும் கிராமத்திற்கு(J/61) இது வரைக்கும் எந்த வித வீட்டுதிட்ட வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை.)
- தொழில்வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறும் பாடசாலைகள் கோயில்கள் போன்றவற்றை கவனத்தில் கொண்டு போக்குவரத்துப் பாதைகளை ஒழுங்கமைத்து கொடுக்க வேண்டும்.
- காணியை இழந்தவர்கட்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அரச காணிகள் பங்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

## 05. வருமானம்

| விபரம் | தொகை |
|---|---|
| 3000 | 164 |
| 3000 - 6000 | 34 |
| 6000 - 10000 | 2 |
| 10000 மேல் | - |
| மொத்தம் | 200 |



## பகுப்பாய்வு


- 82% வீதமானவர்கள் ரூ.3000 க்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றனர்.
- 01% குடும்பங்கள் மாத்திரமே 6000-10000 இடைப்பட்ட வருமானத்தை பெறுபவர்களாக காணப்படுகின்றனர்.
- பெரும்பாலும் வறுமைக்குட்பட்டவர்களாகவே மக்கள் காணப்படுகின்றனர்.
- பெண்களின் வருமானம் குறைவாக காணப்படுவதற்கான காரணம் செய்யும் தொழிலுக்கேற்ற வருமானம் குறைவாக காணப்படுகின்றது. மேலும் தொழில் வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகின்றமையும் ஆகும்.
- சுயதொழில் வாய்ப்புக்கள் நிறுவனங்களால் வழங்கப்பட்டாலும் அதனால் போதியளவு வருமானத்தை பெறமுடியாத தன்மை காணப்படுகின்றது.
- குறிப்பாக ஒரு கிராமத்தில் பெண்தலைமை தாங்கும் குடும்பத்தில் அனைவருக்கும் தையல் மிசின் வழங்குவதன் மூலம் யார் யாரிடம் வருமானத்தை ஈட்டுவது என்ற பிரச்சனை காணப்படுகின்றது.
- வருமான ஊக்குவிப்பு செயற்திட்டங்களோடு செயல்திறன் பயிற்சிகளும் சந்தை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தல்.
- தீர்மானம் எடுத்தலில் குடுமப் அங்கத்தவர் எல்லோரும் பங்குபற்றுதல்.
- காணிகளை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் 86 வீதமான படிவங்களில் கணவரே கையொப்பமிட்டுள்ளார்.
- ஆதனங்கள் கணவன் பெயரில் இருப்பதனால் கணவன் இல்லாத நிலையில் ஆதனத்தை மாற்றுவதற்கோ வருமானம் ஈட்டும் தொழிலிற்கு கடன் பெறுவதற்கோ பெண்களால் முடிவதில்லை.


## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- கிராம மட்டங்களில் மாதர்கிராம சங்கங்களை நிறுவுவதோடு ஏற்கனவே நிறுவப்பட்ட மாதர்கிராம சங்கங்களை சிறப்பாக செயற்படவைத்தல்.
- தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக கிராம மட்டங்களில் கைத்தொழில் பேட்டைகளை உருவாக்குதல்.
- சுயதொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல். (கோழி வளர்ப்பு, தையல் பயிற்சிகள் மற்றும் கைப்பணி பொருட்கள் சார்ந்த பயிற்சிகளை வழங்குதல்) தேவைக் கேற்ப இவை வழங்கப்பட வேண்டும்.
- பெண்களுக்கான விசேட கடன் திட்டங்களை பெற்றுக்கொடுத்தல்.
- பெண்களுக்கான விசேட தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- பெண்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி நீண்டகால அடிப்படையில் பொருளாதார பலத்தை உறுதிப்படுத்தல்.
- அரச நியமனங்களில் கட்டாயம் பெண்தலைமை தாங்கும் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு விசேட சுற்றுநிருபம் தயாரிக்கப்பட வேண்டும்.

## ०६. பாலியல் தொந்தரவு

| விபரம் | | தொகை | |
|---|---|---|---|
| ஆம் | பிரயாணம் | 60 | |
| | வேலைத்தளம் | 32 | |
| | வீடு | 24 | |
| | வேறு | 04 | 120 |
| இல்லை | | | 80 |
| மொத்தம் | | | 200 |



### பகுப்பாய்வு


- 60% ஆனவர்கள் பாலியல் தொந்தரவு இடம்பெறுகின்றது என்றும் 40% ஆனவர்கள் பாலியல் தொந்தரவு இடம்பெறவில்லை என்றும் கூறியுள்ளனர்.
- ஆம் என்று கூறியவர்களில் 50% பேர் பிரயாணம் மற்றும் வேறு காரணங்களால் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகின்றனர். பெரும்பாலும் ஏனைய வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களோடு ஒப்பிடும் போது பிரயாணம் செய்தலில் யாழ் பெண்கள் அதிகமாக, .சிறியரக பேரூந்து பாவனை அதிகமாக காணப்படுவதால் உடலியல் ரீதியான பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- 26.66% ஆனவர்கள் வேலைசெய்யும் இடத்தில் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகின்றனர். பெண்களை போகப்பொருளாக பார்க்கும் தன்மை அதிகரிப்பதாலும் கட்டாயம் வேலைக்கு பெண்கள் செல்லவேண்டி இருப்பதாலும் பாலியல் தொந்தரவு தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- 20% ஆனவர்கள் வீட்டில் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகின்றனர். இது பெரும்பாலும் உறவினர்களாலும் நன்கு தெரிந்தவர்களாலும் மேற்க் கொள்ளப்படுகிறது.
- சினிமாவும் பெரும்பாலும் பாலியல் தொல்லைகளுக்கு மூலகாரணமாக காணப்படுகின்றது.
- இராணுவத்தினராலும் பெரும்பாலான பெண்கள் பாலியல் இம்சைக்கு ஆளாகின்றனர்.

### மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- இப்பிரதேசத்தில் கிராம மட்டங்களில் மாதர் சங்கங்களை உருவாக்குதல். விழிப்புணர்வு குழுக்களை உருவாக்குதல்.
- பாலியல் தொந்தரவுகளை ஏற்படுத்துவோர் மீது கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- ஆபாச படங்களின் வருகையை கட்டாயம் தடைசெய்தல்.
- மனைவிமாரை இழந்த கணவன்மாருக்கு மாற்றுதிருமணங்களை ஏற்படுத்தி கொடுத்தல்.
- புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாகையால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகமாக காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படும் அவற்றை கணடறிந்து ஆரம்பத்திலே தடை செய்தல்.
- இராணுவ அச்சுறுத்தல்களை நீக்குதல்.
- சிவில் நிர்வாகத்தை பலப்படுத்துதல்.
- பாலியல் துஸ்பிரயோகத்திற்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டங்களை நடாத்துதல்.
- பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் மூலம் மேற்படி பிரச்சனைகளை எடுத்துக்கூறி சிறந்த தீர்வை பெற்றுக்கொடுப்பதோடு பெண்களின் தனித்துவத்தை பாதுகாக்க வேண்டும்.
- பாலியல் முறைப்பாடுகளுக்கு விரைவான தீர்வை சட்டரீதியில் பெற்றுக் கொடுத்தல்.

## 07. மறுமணம் பற்றிய அபிப்பிராயம்

| விபரம் | | தொகை | |
|---|---|---|---|
| மறுமணம் செய்யலாம் | பொருளாதார பிரச்சனையில் இருந்து விடுபட | 60 | |
| | பாதுகாப்பு | 04 | |
| | பாலுணர்வு பூர்த்தியாக | - | |
| | சமூகப்பிரச்சினையில் இருந்து விடுபட | | |
| | வேறு | | 12 |
| செய்யாது விடலாம் | | | 104 |
| கருத்துகூற முடியவில்லை | | | 84 |
| மொத்தம் | | | 200 |






### பகுப்பாய்வு


- 6% ஆனோர் மறுதிருமணத்தை விரும்புகின்றனர். இதில் 66.66% ஆனோர் முறையே பொருளாதார பிரச்சனைகளில் இருந்து விடுபடவும் மறு திருமணத்தை விரும்புகின்றனர். மேலும்33.33% ஆனோர் பாதுகாப்பிற்காகவே மறுதிருமணத்தை விரும்புகின்றனர்.
- 52% ஆனோர் மறுதிருமணத்தை விரும்பவில்லை.
- 42% ஆனோர் கருத்துக்கூற விரும்பவில்லை.
- பாலியல் மற்றும் மறுதிருமணம் போன்றவற்றை அந்தரங்க விடயமாக மக்கள் நோக்குவதால் பொறுப்பான பதிலை தர மறுக்கின்றனர்.
- பெரும்பாலான பெண்களுக்கு மறுதிருமணத்தில் விருப்பம் காணப்படினும் சமூக கருத்துக்களுக்கு பயந்து அதனை வெளிப்படுத்த பயப்படுகின்றனர்.
- திருமணத்தை விரும்பும் தன்மை குறைவடைவதோடு குறிப்பாக மறுதிருமணத்தை விரும்பும் தன்மை குறைவாக காணப்படுகின்றது.
- கல்வியின் அவசியத்தை உணர்த்துவதன் மூலம் இடைவிலகும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கையை குறைத்தல்.

### 08. மக்களின் வேறு கருத்துக்கள்

| விபரம் | தொகை |
|---|---|
| பொருளாதார உதவி | 212 |
| பாதுகாப்பு | 12 |
| கல்வி | 06 |
| சமூக பிரச்சனைகளிலிருந்து விடுபட ஆலோசனை | 06 |
| பராமரிப்பு தேவை | 13 |
| மொத்தம் | 250 |




**பகுப்பாய்வு**

- 84.8% ஆனவர்கள் தமக்கு பொருளாதார உதவியை வழங்கும்படி கூறுகின்றனர்.
- 5.2%, 4.8% ஆனோர் முறையே பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உதவியை நாடி நிற்கின்றனர்.


**மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- மாற்றுத்தொழில்களை ஏற்படுத்தலும் அதற்கான வசதிகளை உருவாக்கலும். (ஏனெனில் சீவல் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு போதுமான பனைமரங்கள் தற்போது அழிவடைந்து விட்டது)
- உயர் பாகாப்பு வலயங்களை அகற்றுதல்.
- வறிய மாணவர்களுக்கான விசேடநல உதவிகளை வழங்குதல். (விசேடமாக போரில் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான பராமரிப்பு மற்றும் உதவிகளை பெற்றுக்கொடுத்தல்)
- சர்வதேச தர கல்விகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் பிரதேசத்தை விரைவாக அபிவிருத்தியடைய செய்யலாம்.
- ஆதரவற்ற முதியோரை பராமரிப்பு இல்லங்களில் சேர்த்தல்.
- தலைமை தாங்கும் பெண்களுக்கான சமூக அந்தஸ்தை பெற்றுக்கொடுத்தல்.
- விசேட கடன் உதவி திட்டங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

# தெல்லிப்பளை

## 01. வயது

| விபரம் | தொகை |
|---|---|
| 15 - 25 | 04 |
| 25 - 35 | 32 |
| 35 - 45 | 28 |
| 45 - 55 | 28 |
| 55 - 65 | 48 |
| 65 மேற்பட்ட | 60 |
| மொத்தம் | 200 |




**பகுப்பாய்வு**

- 65 வயதிற்கு மேல் பெண்தலைமைதாங்கும் குடும்பங்கள் காணப்படுவதால் பல்வேறு பிரச்சனைகளை முகங்கொடுக்கின்றனர். குறிப்பாக பராமரிப்பு பிரச்சனையை எதிர்கொள்கின்றனர்.
- போர் மட்டுமன்றி நோய்கள் இங்கு முக்கியமான காரணியாக காணப்படு கின்றது. இங்கு தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களின் தாக்கம் காணப்படுகின்றது.


- மேலும் விவாகரத்துக்கள் அதிகமாக காணப்படுவதாலும் பெண்கள் தலைமை தாங்க வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது.
- பெரும்பாண்மையாக 55 வயதிற்கு மேற்பட்டவர்களாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக காணப்படுகின்றனர்.
- 2% ஆனவர்களாக 15-25 வரையான பெண்கள் 2% காணப்படுகின்றனர்.
- பெரும்பாலான பெண்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.
- இளவயது பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள் 18% காணப்படுகின்றது.
- அங்கவீனம் மற்றும் பிறகாரணங்களாலும் பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கும் தன்மை அதிகரித்து காணப்படுகின்றது.
- ஆண்களின் மரணம் மற்றும் விவாகரத்து போன்ற காரணங்களால் முதுமை யிலும் பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கும் தன்மை காணப்படுகின்றது.
- குடும்பத்தில் ஆண்பிள்ளைகள் திருமணம் முடித்து பெற்றோரை கவனிக்காத நிலையில் முதுமையான நிலையிலும் பெண் பிள்ளைகளை பராமரிக்க குடும்பத்தை தலைமை தாங்க வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது.

## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- 65 வயதிற்கு மேற்ப்பட்டவர்களும் குடும்பங்களை தலைமை தாங்குவதால் அவர்களுக்காக விசேட திட்டங்களை உருவாக்குதல். (முதியோர் கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுத்தல்)
- பெரும்பாலும் 45 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், மேற்பட்டவர்களாகவும் இருப்பதால் முன்வைக்கப்படும் திட்டங்கள் இவர்களை மையப்படுத்தியதாக இருக்கவேண்டும்.
- 18 வயதிற்கு உட்பட்ட திருமணங்களை தடைசெய்தல். இதற்கு சமூக அமைப்புக்களின் ஒத்துழைப்பு அவசியம் ஆகும்.
- வலுக்கட்டாய திருமணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தல்.
- இளவயது திருமணங்களை பற்றி விழிப்புணர்வு செய்வதோடு அதன் தாக்கங்கள் பற்றி எடுத்துக்கூறுதல்.
- தலைமை தாங்கும் பெண்களுக்கு தொற்றும் மற்றும் தொற்றாத நோய்களை பற்றி எடுத்துகூறுதுல்.
- முதுமை ஒய்வூதியங்களை பெற்றுக்கொடுத்தல்.

## 02. குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை

| விபரம் | தொகை |
|---|---|
| 1 | 88 |
| 2 | 32 |
| 3 | 28 |
| 4 | 32 |
| 5 | 12 |
| 5 மேல் | 24 |
| மொத்தம் | 200 |




**பகுப்பாய்வு**

- 01 உறுப்பினரை கொண்ட குடும்பங்களே அதிகமாக காணப்படுகின்றர்.
- வெளிநாடுகளில் பிள்ளைகள் மற்றும் கணவன் வசிப்பதால் பெண்கள் தனித்து வாழவேண்டிய கட்டாய சூழல் காணப்படுகின்றது.
- கணவனால் மற்றும் பிள்ளைகளினால் கைவிடப்பட்டவர்களின் தொகை அதிகமாக காணப்படுவதால் பெண்கள் தனித்து வாழும் தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- போருக்கு பின்னர் குடும்பஅங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவடைந் துள்ளது.

- போரினால் பல்வேறு இன்னல்களை அனுபவித்த பெண்கள் மேலும் தனிமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- பெரும்பாலும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் பெண் உறுப்பினர்களே அதிகமாக உள்ளனர்.
- கூட்டுக் குடும்ப முறை குறைவடைந்து கொண்டுவருகின்றது.
- விவாகரத்து அதிகமாக காணப்படுவதால் பெண்கள் தனித்து வாழும் தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- பிள்ளைகள் மற்றும் உறவினர்களால் பெண்கள் கைவிடப்பட்ட தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- காணாமல் போதல் மற்றும் கைவிடப்பட்ட ஆண்களால் மற்றும் கடத்தல் போன்றவற்றால் பெண்கள் தனித்து வாழவேண்டிய கட்டாயம் காணப்படு கின்றது.
- பிள்ளைகளை பெற்றுக்கொள்வதில் உள்ள விருப்பமில்லாத தன்மையும் பொருளாதார சிக்கல்களும் காரணமாக தனித்து வாழவேண்டிய தன்மை காணப்படுகின்றது.
- சமூக ரீதியான மனப்பாங்குகள் காரணமாக பிள்ளைகளை விட்டு பிரிந்திருத்தல். (அதாவது வரட்டுக்கௌரவம் மற்றும் பிடிவாதம் போன்ற காரணிகளை பிள்ளைகளின் காதல் திருமணங்களில் அரங்கேற்றப்படுவதால் பிள்ளைகளைவிட்டு பிரிந்திருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.)

## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- தனிமையில் பெண்கள் அதிகமாக வசிப்பதால் உளவியல் ரீதியிலான ஆலோசனைகள் வழங்கவேண்டியது கட்டாயமாகும்.
- மாலை நேர முதியவர் கலந்துரையாடல்களை ஏற்ப்பாடு செய்யலாம்.
- முதியோர் இல்லங்களில் தனித்து வாழ்வோரை இணைத்து விட வேண்டும்.
- பாலியல் கல்வி பற்றிய அடிப்படை விடயங்களை எடுத்துக்கூறுதல்.
- பொருளாதார உதவிகளை மேற்கொள்வதன் மூலம் பெண்களுக்கான பலப்படுத்தும் தன்மையினை உறுதிப்படுத்தல்.
- கைவிடப்பட்டவர்களுக்கான விசேட திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். தனித்து வாழும் குடும்பஅங்கத்தவர்களுக்கு விசேடநல திட்டங்கள் ஏற்ப்படுத்த வேண்டும்.
- பெண்களுக்கான விசேட கல்வியை உட்புகுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளல்.
- சமூக பொருளாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்தி கொடுக்க வேண்டும்.
- காணமல்போதல் மற்றும் கைது செய்யப்பட்டவர்களை பன்நாட்டு தொண்டுநிறுவனங்கள் மூலம் மீட்டுக்கொடுத்தல்.
- பிள்ளைகளை பெற்றுக்கொள்வதற்கான அவசியத்தை எடுத்துக்கூறல்.
- சமூக மாற்றத்தினை முதியவயது கொண்ட மற்றும் பாதகமாக சமூக மனப்பாங்கு கொண்ட பெண்களிடம் எடுத்துக்கூறி தனிமைதன்மையை அகற்றுதல்.

## 03. பெண்கள் குடும்பங்களுக்கு தலைமை தாங்குவதற்கான காரணம்

| காரணம் | தொகை |
|---|---|
| கணவனின் மரணம் | 160 |
| கணவனின் அங்கவீனம் | 08 |
| கணவனை பிரிந்திருத்தல் | 20 |
| கணவன் தடுப்பில் இருத்தல் | 12 |
| மொத்தம் | 200 |

**பகுப்பாய்வு**


- யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பெரும்பாலான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் வன்னி மாவட்ட வரலாற்றுடன் தொடர்பு காணப்படுகின்றது.
- 80% கணவனின் மரணம் காரணமாக பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கும் நிலை அதிகரித்து காணப்படுகின்றது. (இம்மரணமானது போர்,நோய்,விபத்து,கொலை, தற்கொலை மற்றும் பிற காரணங்களால் ஏற்பட்டுள்ளது.) குறிப்பாக போரினாலும் கொடிய நோய்களினாலும் ஆண்கள் இறந்துள்ளனர். மேலும் இந்திய அமைதிபடையின் நடவடிக்கையினாலும் இலங்கை இராணுவ படுகொலைகளிலும் ஏராளமான பெண்கள் கணவன்மாரை பறிகொடுத்துள்ளனர்.
- பொருளாதார சுமை அதிகரிக்க அதன்காரணங்களால் ஏற்படும் தாக்கங்களினால் பெரும்பாலான ஆண்கள் தற்கொலை முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இதனால் பெண்கள் குடும்பங்களை தலைமை தாங்கும் தன்மை அதிகரித்து காணப்படுகின்றது.
- பல்வேறு பட்ட சமூக நாகரீக காரணிகளால் விவாகரத்து மோகம் அதிகமாக காணப்படுகின்றது. இதனால் பிரிந்து வாழும் தன்மை அதிகரித்து காணப்படுகின்றது.
- மேலும் ஆண்கள் வேலைவாய்ப்பற்றிருப்பதும் பெண் தலைமை தாங்குவதற்கான ஒரு பிற்பட்ட கால காரணியாக இங்கு காணப்படுகின்றது.
- 6% ஆனவர்கள் தலைமைதாங்குவதற்கான காரணம் கணவன் தடுப்பில் வைத்திருக்கப்படுதல் ஆகும். யுத்தம் முடிந்து 04 ஆண்டுகள் ஆகியும் தடுப்பில் வைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை.
- முதிய வயதில் பெண்கள் தலைமை தாங்குவதற்கான ஒரு காரணம் போதைவஸ்துக்கு ஆண்கள் ஆளாகி குறிப்பிட்ட வயதிற்கு முன்னரே இறந்து போவதால் பெண்கள் குடும்பத்தை தலைமை தாங்கும் தன்மை அதிகரித்து காணப்படுகின்றது.

**மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- 80% ஆனவர்கள் விதவைகளாக இருப்பதால் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொடுத்தல்.
- உதவிதிட்டங்களை வழங்கும் போது பெண்தலைமை தாங்கும் குடும்பங்களை முன்வைத்து திட்டங்கள் வழங்கப்படவேண்டும்.
- பெண்களை மேம்படுத்துவதற்காக அவர்களை அரசியலில் ஈடுபடுத்தல். தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கி பெண்களை வலுவூட்டுதல்.
- பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு விசேட சமூக நல திட்டங்களை வழங்குவதோடு சமூக பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- 4% அங்கவீனமுடையவர்களாக இருப்பதால் மாற்றுவலு சாதனங்களை பெற்றுக்கொடுத்தல்.
- 10% ஆனவர்கள் கணவனை பிரிந்திருப்பதால் உளவியல் ஆற்றுப்படுத்தல் மூலம் நல்லிணக்கங்களை ஏற்படுத்தல்.
- பன்நாட்டு தொண்டு நிறுவனங்கள் மூலம் தடுப்பில் உள்ள கணவர்களை சமூகத்தில் மீள இணைத்தல். (உ.ம்.மனித உரிமை ஆணைக்குழு)
- போதைவஸ்து பாவனையால் அதிகமான கணவர்மார் இறப்பதனால் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். குறிப்பாக மதுசார சட்டபூர்வமற்ற அனுமதிபத்திரங்களை வழங்குவதை தடுத்தல்.
- பிரிந்திருக்கும் குடும்பங்களின் காரணங்களை கண்டறிந்து, பெண்ணியல் மற்றும் சமூக தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆற்றுப்படுத்தல் செயற் பாடுகளை மேற்கொண்டு குடும்பங்களை இணைப்பதற்கான நடவடிக்கை களை மேற்க்கொள்ளல்.

## 04. வசிப்பிடத்தின் தன்மை

| விபரம் | தொகை |
|---|---|
| நிரந்தரம் | 160 |
| தற்காலிகம் | 40 |
| மொத்தம் | 200 |




**பகுப்பாய்வு**

❄ 80% ஆனவர்கள் நிரந்தரவீடுகளில் வசிக்கின்றனர்.

❄ வீட்டுதிட்டங்கள் பூரணமாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

❄ பொதுவான பார்வையில் அடிப்படை வசதிகள் சிறப்பான முறையில் காணப்படுகின்றது. இருப்பினும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமாக வசிக்கும் சூழல் என்ற தன்மை குறைவாகவே காணப்படுகின்றது.

❄ இது வரைக்கும் இப்பிரதேசத்தில் 100% ஆக வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட வில்லை.

❄ 80% கிணறுகள் வழங்கப்பட்டுள்ளது.

❄ மேலும் 90% மலசலகூடங்களும் வழங்கப்பட்டுள்ளது.

❄ 90% மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

❄ தற்காலிக வீடுகளில் மக்கள் வாழ்வதற்கு பிரதான காரணம் பொருளாதார வசதிகள் குறைவாக காணப்படுகின்றமையாகும்.

❄ மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்கள் இங்கு காணப்படுவதால் நிரந்தர வீடுகள் இன்னும் பூரணமாக வழங்கப்படவில்லை.

❄ தற்காலிக வதிவிடங்களில் குறிப்பிடதக்கவிடயமாக உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் தன்மை காணப்படுகின்றது.

❄ வேறு பிரதேசங்களை நிரந்தரமாக கொண்ட மக்கள் தெல்லிப்பளை பிரதேசத்தில் வசிப்பதால் தற்காலிக வதிவிடங்களில் வசிக்கின்றனர்.


❄ உயர்பாதுகாப்பு வலய பிரதேசத்தில் 22 வருடங்களாக உட்பட்டு காணப்பட்ட காரணத்தாலும் தற்காலிக வீடுகளில் வசிக்கின்றனர்.

**மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- மலசலகூடங்கள் மற்றும் கிணறுகள் சார் பகுதிதிருத்தவேலைகளுக்கும் வழங்கப்படாத பகுதிகளில் வழங்குவதற்கும் சிபார்சு செய்தல்.
- அரச அரசசார்பற்ற நிறுவனங்களோடு ஒப்பந்தங்களை மேற்கொண்டு கொடுக்கப்படாத இடங்களில் நிரந்தர வீட்டுதிட்டங்களை பெற்றுக் கொடுத்தல். (உ.ம்: தெல்லிப்பளை பிரதேசசெயலகத்திற்கு உட்பட்ட 90 குடும்பங்களுக்கு மேற்பட்ட குடும்பங்களை கொண்ட சேந்தாங்குளம் எனும் கிராமத்திற்கு இது வரைக்கும் எந்த வித வீட்டுதிட்ட வசதிகள் மேற்கொள்ளப் படவில்லை)
- தொழில்வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறும் பாடசாலைகள் கோயில்கள் போன்றவற்றை கவனத்தில் கொண்டு போக்குவரத்துபாதைகளை ஒழுங்கமைத்து கொடுக்க வேண்டும்.
- அதிகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
- சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்வதற்கான விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படாத இடங்களில் அவற்றினை அகற்றுவதற்கு சமூக ஒருங்கிணைத்தல் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தல்.
- பொருளாதார உதவிகளை பெற்றுக்கொடுத்தல். குறிப்பாக தற்போது மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் கடற்தொழில் மற்றும் விவசாய சுயதொழில் செய்வதற்கான உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல். இவை பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவ வேண்டும்

**05. வருமானம்**

| விபரம் | தொகை |
|---|---|
| 3000 | 180 |
| 3000 - 6000 | 20 |
| 6000 - 10000 | - |
| 10000 மேற்பட்ட | - |
| மொத்தம் | 200 |




பகுப்பாய்வு

- 90% வீதமானவர்கள் ரூ.3000 க்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றனர்.
- 10% குடும்பங்களில் மாத்திரமே 6000-10000 இடைப்பட்ட வருமானத்தை பெறுபவர்களாக காணப்படுகின்றனர்.
- பெரும்பாலும் வறுமைக்குட்பட்டவர்களாகவே மக்கள் காணப்படுகின்றனர்.
- பெண்களின் வருமானம் குறைவாக காணப்படுவதற்கான காரணம், செய்யும் தொழிலுக்கேற்ற வருமானம் குறைவாக காணப்படுகின்றது. மேலும் தொழில் வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகின்றமையும் ஆகும்.
- சுயதொழில் வாய்ப்புக்கள் நிறுவனங்களால் வழங்கப்பட்டாலும் அதனால் போதியளவு வருமானத்தை பெறமுடியாத தன்மை காணப்படுகின்றது.
- குறிப்பாக ஒரு கிராமத்தில் பெண்தலைமை தாங்கும் குடும்பத்தில் அனைவருக்கும் தையல் மிசின் வழங்குவதன் மூலம் யார் யாரிடம் வருமானத்தை ஈட்டுவது என்ற பிரச்சனை காணப்படுகின்றது.
- உயர்பாதுகாப்பு வலயங்களில் இப்பிரதேசம் இருக்கின்ற படியினால் பெண்கள் வெளியில் வேலைக்கு செல்வதும் அச்சுறுத்தலுக்குரிய விடயமாக காணப்படுகின்றது.
- உயர்பாதுகாப்பு வலயங்களில் இப்பிரதேசம் இருக்கின்ற படியினால் உதவி மற்றும் தொழில் வாய்ப்பை வழங்க முன்வரும் பன்நாட்டு நிறுவனங்களின் அனுமதி மறுக்கப்படுகின்றது.

## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்


- கிராமமட்டங்களில் மாதர்கிராம சங்கங்களை நிறுவுவதோடு ஏற்கனவே நிறுவப்பட்ட மாதர்கிராம சங்கங்களை சிறப்பாக செயற்படவைத்தல்.
- தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக கிராம மட்டங்களில் கைத்தொழில் பேட்டைகளை உருவாக்குதல்.
- சுயதொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல். (கோழி வளர்ப்பு, தையல்


பயிற்சிகள் மற்றும் கைப்பணி பொருட்கள் சார்ந்த பயிற்சிகளை வழங்குதல்) தேவைக்கேற்ப இவை வழங்கப்பட வேண்டும்.

- பெண்களுக்கான விசேட கடன் திட்டங்களை பெற்றுக்கொடுத்தல்.
- பெண்களுக்கான விசேட தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல். குறிப்பாக PARCIC நிறுவனம் மூலம் தொடர்பு கொண்டு தையல் பயிற்சிகளையும், கடலுணவுகளை பதனிடுவதற்கான பயிற்சிகளையும் வழங்குதல்.
- பெண்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி நீண்டகால அடிப்படையில் பொருளாதார பலத்தை உறுதிப்படுத்தல்.
- அரச நியமனங்களில் கட்டாயம் பெண்தலைமை தாங்கும் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு விசேடசுற்றுநிருபம் தயாரிக்கப்பட வேண்டும்.
- வரவுசெலவு திட்டத்தில் பெண்களுக்கான நிதிஒதுக்கீட்டை அதிகரித்தல்.
- பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக காணப்படுகின்ற அச்சுறுத்தல்களை இனங்கண்டு அவற்றினை நீக்குதல்.

## 06. பாலியல் தொந்தரவு

| விபரம் | | தொகை | |
|---|---|---|---|
| ஆம் | பிரயாணம் | 48 | |
| | வேலைத்தளம் | 24 | |
| | வீடு | 16 | |
| | வேறு | 32 | |
| | | | 120 |
| இல்லை | | | 80 |
| மொத்தம் | | | 200 |






**பகுப்பாய்வு**

- 60% ஆனவர்கள் பாலியல் தொந்தரவு இடம்பெறுகின்றது என்றும் 40% ஆனவர்கள் பாலியல் தொந்தரவு இடம்பெறவில்லை என்றும் கூறியுள்ளனர்
- ஆம் என்று கூறியவர்களில் 40% பேர் பிரயாணம் மற்றும் வேறு காரணங்களால் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகின்றனர். பெரும்பாலும் ஏனைய வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களோடு ஒப்பிடும் போது பிரயாணம் செய்யும் தன்மை யாழ்ப்பாண பெண்களிடம் அதிகமாக காணப்படுகின்றது. சிறியரக பேரூந்து பாவனை அதிகமாக காணப்படுவதால் உடலியல் ரீதியான பாலியல் துன்புறுத்தலுக்கு ஏற்படும் தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- 20% ஆனவர்கள் வேலைசெய்யும் இடத்தில் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகின்றனர். பெண்களை போகப்பொருளாக பார்க்கும் தன்மை அதிகரிப்பதாலும் கட்டாயம் வேலைக்கு பெண்கள் செல்லவேண்டி இருப்பதாலும் பாலியல் தொந்தரவு தன்மை அதிகமாக காணப்படுகின்றது.
- 13.3% ஆனவர்கள் வீட்டில் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகின்றனர். இது பெரும்பாலும் உறவினர்களாலும் நன்கு தெரிந்தவர்களாலும் மேற்கொள்ளப் படுகிறது.
- 26.66% ஆனவர்கள் வேறு காரணங்களால் பாலியல் பிரச்சனைக்கு முகங்கொடுக்கின்றனர். இதில் குறிப்பாக இராணுவத்தினாலும் பெரும்பாலான பெண்கள் பாலியல் இம்மைக்கு ஆளாகின்றனர்.
- சினிமாவும் பெரும்பாலும் பாலியல் சேட்டைக்கொரு மூலகாரணமாக காணப்படுகின்றது.


- உயர்பாதுகாப்பு வலயங்களில் வசிப்பதாலும் வெளியிடங்களுக்கு செல்லும் தன்மை குறைவாக காணப்படுவதால் இலகுவாக பாலியல் துஸ்பிரயோகத் திற்கு ஆளாகின்றனர்.
- விரும்பியோ விரும்பாமலோ பொருளாதார தேவையை பூர்த்தி செய்ய பாலியல் சேட்டைக்கு ஆளாகும் தன்மை காணப்படுகின்றது.


**மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- இராணுவ அச்சுறுத்தல்களை நீக்குதல்.
- சிவில் நிர்வாகத்தை பலப்படுத்துதல்.
- பாலியல் துஸ்பிரயோகத்திற்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டங்களை நடாத்துதல்.
- பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் மூலம் மேற்படி பிரச்சனைகளை எடுத்துக்கூறி சிறந்த தீர்வை பெற்றுக்கொடுப்பதோடு பெண்களின் தனித்துவத்தை பாதுகாக்க வேண்டும்.
- இப்பிரதேசத்தில் கிராம மட்டங்களில் மாதர் சங்கங்களை உருவாக்குதல்.
- விழிப்புணர்வு குழுக்களை உருவாக்குதல்.
- பாலியல் தொந்தரவுகளை ஏற்படுத்துவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை களை மேற்க்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- ஆபாச படங்களின் வருகையை கட்டாயம் தடைசெய்தல்.
- மனைவிமாரை இழந்த கணவன்மாருக்கு மாற்றுதிருமணங்களை ஏற்படுத்தி கொடுத்தல்.
- புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசம் என்ற படியால் பெண்களுக் கெதிரான வன்முறைகள் அதிகமாக காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படும். அவற்றை கணடறிந்து ஆரம்பத்திலே தடை செய்தல்.
- பெண்கள் எந்நேரமும் நடமாட கூடிய அனுமதியை பெற்றுக்கொடுப்பதோடு அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- உறவினர்களால் ஏற்படும் பாலியல் தொந்தரவுகளை தடுக்க விழிப்புணர்வு ஏற்ப்டுத்தல்.
- வீட்டுதிட்டங்களை வழங்கி தனித்தனி குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- உயர்பாதுகாப்பு வலயங்களை சர்வதேச உதவியுடன் மற்றும் சமூக ஒருங்கிணைத்தல் மூலம் அகற்றுதல்.

## 07. மறுமணம் பற்றிய அபிப்பிராயம்

| விபரம் | | தொகை | |
|---|---|---|---|
| மறுமணம் செய்யலாம் | பொருளாதார பிரச்சனையில் இருந்து விடுபட | 16 | |
| | பாதுகாப்பு | 08 | |
| | பாலுணர்வு பூர்த்தியாக | - | |
| | சமூகப்பிரச்சினையில் இருந்து விடுபட | 20 | |
| | வேறு | | 44 |
| செய்யாது விடலாம் | | | 72 |
| கருத்துகூற முடியவில்லை | | | 84 |
| மொத்தம் | | | 200 |



## பகுப்பாய்வு

- ✱ 22% ஆனோர் மறுதிருமணத்தை விரும்புகின்றனர். இதில் 36.36% ஆனோர் முறையே பொருளாதார பிரச்சனைகளில் இருந்து விடுபடவும் மறு திருமணத்தை விரும்புகின்றனர். மேலும்18.18% ஆனோர் பாதுகாப்பிற்காகவே மறுதிருமணத்தை விரும்புகின்றனர்.
- ✱ பெரும்பாலான விவாகரத்துக்கள் ஏற்பட பாலியல் திருப்தியின்மைதான் காரணம் என அறிக்கைகளில் காணப்பட்டபோதும் அந்தரங்க விடயமாக நினைத்து அக்கேள்விக்கான பதில் வழங்கப்படவில்லை.
- ✱ 36.36% ஆனோர் முறையே சமூக பிரச்சனைகளில் இருந்து விடுபடவும், மறு திருமணத்தை விரும்புகின்றனர்.
- ✱ குறிப்பாக இளம்விதவைகள் கூட மறு திருமணத்தை விரும்பவில்லை அதற்கான ஒரு காரணமாக மீண்டும் கொடுப்பதற்கு சீதனம் தங்களிடம் இல்லையென்று குறிப்பிடுகின்றனர்
- ✱ 36% ஆனோர் மறுதிருமணத்தை விரும்பவில்லை.
- ✱ 42% ஆனோர் கருத்துக்கூற விரும்பவில்லை.
- ✱ பாலியல் மற்றும் மறுதிருமணம் போன்றவற்றை அந்தரங்க விடயமாக மக்கள் நோக்குவதால் பொறுப்பான பதிலை தர மறுக்கின்றனர்.
- ✱ பெரும்பாலான பெண்களுக்கு மறுதிருமணத்தில் விருப்பம் காணப்படினும் சமூக கருத்துக்களுக்கு பயந்து அதனை வெளிப்படுத்த பயப்படுகின்றனர்.
- ✱ திருமணத்தை விரும்பும் தன்மை குறைவடைவதோடு குறிப்பாக மறுதிருமணத்தை விரும்பும் தன்மை குறைவாக காணப்படுகின்றது.
- ✱ அதிகமான பெண்கள் இளவயதில் இருப்பதால் அவர்களுக்கு மறுதிருமணம் அவசியமான விடயமாக காணப்படுகின்றது.


## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- ◊ கருத்துக்கூற விரும்பாதவர்களின் கருத்துக்களை நேரடியாக சென்று பெற்றுக்கொள்ளுதல். (42%)
- ◊ பாடசாலைகளில் பாலியல் கல்வியை அறிமுகம் செய்வதன் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- ◊ மாதர் சங்கங்கள் பெண்களின் மறு திருமணம் மற்றும் பாலியல் விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வாக இருக்கவேண்டும்.
- ◊ உளவியல் ஆற்றுப்படுத்தல் மூலமாக மறுதிருமணத்தின் அவசியத்தை உணர்த்துதல்.
- ◊ இளம்விதவைகளுக்கு மறுதிருமணம் செய்ய ஊக்குவித்தல்.
- ◊ மறுதிருமணம் செய்வதற்கான ஏற்ப்பாடுகளை செய்து கொடுத்தல். (குறிப்பாக திருமண செலவுகளை ஏற்ப்பதற்கு நிறுவனங்களின் உதவியினை பெற்றுக்கொடுத்தல்)

- மறுதிருமணம் செய்வதற்கான சமூக அந்தஸ்தினை பெற்றுக்கொடுத்தல்.
- மறுதிருமணம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பெண்ணை மாத்திரமின்றி உறவினர்கள் மற்றும் நண்பர்களை விழிப்புணர்ச்சி கொடுத்தல்.
- பெண்ணிய நிறுவனங்கள் மூலம் இலவச கிராமிய பாலியல் கல்வியை ஏற்படுத்துவதோடு அனைத்து வித பெண்களின் உடல் உள பராமரிப்பினை பேண வேண்டும்.
- உயர்பாதுகாப்பில் இப்பிரதேசம் இருப்பதால் சமூக மற்றும் உடலியல் பாதுகாப்பை உறுதிப்படுத்த கட்டாயம் மறுதிருமணத்தின் அவசியம் பற்றி எடுத்துக்கூறலும் சமூகத்தின் மறுதிருமணம் பற்றிய தப்பான பார்வையை நீக்குதலும்.

## 08. பிள்ளைகளின் கல்வி பற்றிய எதிர்பார்ப்பு

| விபரம் | தொகை |
|---|---|
| க.பொ.த.சா/ தரம் | 12 |
| க.பொ.த.உ/தரம் | 08 |
| பல்கலைக்கழகம் | 44 |
| தொழில் கல்வி | 120 |
| கருத்து கூறவில்லை | 16 |
| மொத்தம் | 200 |



## பகுப்பாய்வு

* 60% ஆனவர்கள் தமது பிள்ளைகளின் கல்விதரமானது தொழில் கல்வியை மையபடுத்தியதாக இருக்கவேண்டும் என விரும்புகின்றனர்.
* 22% ஆனவர்கள் தமது பிள்ளைகளின் கல்விதரமானது பல்கலைகழகம் வரை இருக்கவேண்டும் எனவிரும்புகின்றனர்.
* 6%, 4% ஆனோர் க.பொ.த.சா.தரம் மற்றும் க.பொ.த.உ.தரம் வரைபடித்திருந்தால் போதும் என நினைக்கின்றனர்.
* தொழில் கல்வியை மக்கள் அதிகமாக விரும்புவதற்கு காரணம் வருமானத்தை இலகுவாக பெற்றுக்கொள்ளகூடியதாக இருப்பதாகும்.
* கல்வி மூலம் தான் தமது சமூகத்தை அபிவிருத்தி செய்யமுடியும் என மக்கள் நம்புகின்றனர்.
* எதிர்காலத்தில் அதிகுறைந்த கல்வியாக க.பொ.த.சா.தர கல்வினை நினைக்கின்றனர். அந்தளவுக்கு சர்வதேச கல்வியின் அறிமுகம் கிடைத்துள்ளது.
* தனியார் துறை கல்வியினையும் மக்கள் எதிர்பார்ப்பதோடு வரவேற்கும் தன்மையும் காணப்படுகின்றது.
* தொழில்நுட்ப கல்வியை பொதுவாக பெண்கள் தமது பிள்ளைகளுக்கு அவசியம் என விரும்புகின்றனர்.
* பாடசாலை மற்றும் பல்கலைகழக கல்வியை விட தொழில் கல்வியை விரும்பும் போக்கு காணப்படுகின்றது.
* பட்டபடிப்பு முடித்தும் வேலையின்மை காணப்படுகின்றது என்ற மன நிலை மக்களிடம் காணப்படுகின்றது.


## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

* கட்டாய கல்வியினை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தல்.
* இலங்கையின் கல்வி முறையில் மாற்றத்தை கொண்டுவருதல். இது நீண்டகாலத்தில் தான் சாத்தியமாகும்.
* பட்டபடிப்பு முடித்த பின்னர் உடனடியாக வேலைவாய்ப்பை பெறுவதற்கான சாத்தியதன்மையை அதிகரித்தல்
* மகளிருக்கான சிறப்பு கல்வி திட்டங்களை மேற்க்கொள்ளல்.
* கல்வியின் அவசியத்தை உணர்த்துவதன் மூலம் இடைவிலகும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கையை குறைத்தல்.
* எதிர்பார்பிற்கேற்ப தரமான கல்வியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
* மெல்லகற்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களை நடாத்துதல்.
* கல்வியின் அவசியத்தை உணர்த்துவதன் மூலம் இடைவிலகும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கையை குறைத்தல்.

* தொழில் கல்வியை அறிமுகப்படுத்துவதோடு புதிய தொழில்நுட்பங்களை கல்வியில் புகுத்துதல்.
* சர்வதேச தர கல்வியை இலகுவாக பெற்றுக்கொள்ள கூடியவாறு வாய்ப்புக்களை இலகுபடுத்தல்.
* கல்விக்கு ஏற்படும் தடைகளை முற்றாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* கல்விபெற்றுக்கொள்வதற்காக பெண்களுக்கான விசேட புலமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

## 09. சிறுவர் பராமரிப்பு (வேலைக்கு பெண்கள் செல்வதால்)

| விபரம் | தொகை |
|---|---|
| பராமரிப்பு குறைகின்றது | 76 |
| உணவு சரியான நேரத்தில் கிடைப்பதில்லை | 52 |
| பாலியல் துன்புறுத்தல் சூழ்நிலை ஏற்படுதல் | 72 |
| மொத்தம் | 200 |



**பகுப்பாய்வு**

- ❖ பெண்கள் வேலைக்கு செல்வதால் பெரும்பாலும் குடும்ப நடடிக்கைகள் பாதிக்கபடுவதோடு குறிப்பாக சிறுவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
- ❖ பெண்கள் வேலைக்கு செல்வதால் 26% சிறுவர்களுக்கு சரியான நேரத்தில் உணவு கிடைப்பதில்லை.
- ❖ சிறுவர்களின் கல்வி பாதிப்படைவதோடு அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது.
- ❖ இராணுவத்தினரால் சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் பாதிக்கப்படுவதும் நடைபெற்று வருகின்றது.
- ❖ சிறுவர்களின் பராமரிப்பு குறைவதால் அவர்கள் உடல் உளவியல் தாக்கங்களுக்கு ஆளாகின்றனர். இது நீண்ட காலத்தில் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
- ❖ 38% வீதமான சிறுவர்களின் பராமரிப்பு பெண்கள் வேலைக்கு செல்வதால் பாதிக்கப்படுகின்றது.
- ❖ சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஒரு முக்கிய காரணமாக பெண்கள் வேலைக்கு செல்வதே முக்கிய காரணமாகும்.
- ❖ சிறுவர்கள் பெரும்பாலும் வழிதவறி போவதற்கான காரணம் பெண்கள் வேலைக்கு செல்வது ஆகும்.
- ❖ பெண்களை கீழ்உழைப்பு நிலைக்கு பயன்படுத்துவதும் ஒரு காரணமாகும். இதனால் நேரத்திற்கு வீட்டிற்கு வரமுடியாத சூழல் காணப்படுகின்றது.
- ❖ பெண்கள் வேலைக்கு செல்வதால் பிள்ளைகள் பெற்றோருக்கான இடைவெளி அதிகரிக்கின்றது.

**மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**


- ✿ பிரதேசம் தோறும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை அமைத்தல்.
- ✿ சிறுவர்களின் கல்வி பராமரிப்பு பொழுதுபோக்கு மற்றும் போசாக்கு விடயங்கள் பற்றி சிறுவர்களுக்கும், சமூகங்களுக்கும் எடுத்து கூறுதல். மேலும் அதற்கான விசேட விழிப்புணர்வு செயற்திட்டங்களை மேற்க்கொள்ளுதல்.
- ✿ பெண்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி சிறுவர்களின் பராமரிப்பு போசாக்கு போன்றவற்றில் கூடிய கவனம் எடுத்தல்.
- ✿ பெண்களின் வேலை நேரத்தை உறுதிப்படுத்தல், மற்றும் வேலைக்கேற்ற ஊதியத்தை பெற்றுக்கொடுக்க வழிவகைகள் செய்தல்.
- ✿ சிறுவர்களுக்கான பூங்காக்களை பிரதேசவாரியாக அதிகரித்தல்.
- ✿ சிறுவர்களின் கல்வி, பராமரிப்பு, பொழுதுபோக்கு மற்றும் போசாக்கு விடயங்கள் பற்றி சிறுவர்களுக்கும், சமூகங்களுக்கும் எடுத்து கூறுதல். மேலும் அதற்கான விசேட விழிப்புணர்வு செயற்திட்டங்களை மேற்க்கொள்ளுதல்.
- ✿ பெண்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி சிறுவர்களின்

பராமரிப்பு போசாக்கு போன்றவற்றில் கூடிய கவனம் எடுத்தல்.

- இராணுவத்தினால் ஏற்படுத்தபடும் பாலியல் வன்முறைகளை கண்டிப்பதோடு மட்டுமல்லாது சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தல்.
- பெண்கள் வேலை முடிந்து வரும் வரையில் சிறுவர்கள் பாடசாலை சென்ற பின்னர் மாலைநேரத்தில் ஒரு சிறுவர் கண்காணிப்பு நிறுவனத்தில் அல்லது வேறு சமூக நிறுவனத்தில் தங்குவதற்கு ஏற்ப்பாடு செய்தல்.
- சிறுவர் பாலியல் துன்புறுத்தலை தடைசெய்வதோடு அவ்வாறு மேற்க்கொள்வோருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்து உச்சகட்ட தண்டனை பெற்றுக்கொடுத்தல்.
- சிறுவர்களின் உடல் மற்றும் உளவியல் தேவைகளை பெண்களுக்கு எடுத்துக்கூறி பிள்ளைகளுடன் அதிகநேரம் கழிப்பதற்கு ஏற்ப்பாடு செய்தல்.
- நீண்டகாலத்தில் பிள்ளைகளுக்கு ஏற்ப்படும் தாக்கங்களை எடுத்துக்கூறுதல்.

## 10. மக்களின் வேறு கருத்துக்கள்

| விபரம் | தொகை |
|---|---|
| பொருதார உதவி | 120 |
| பாதுகாப்பு | 12 |
| கல்வி | 08 |
| சமூக பிரச்சனைகளிலிருந்து விடுபட ஆலோசனை | 40 |
| பராமரிப்பு தேவை | 20 |
| மொத்தம் | 200 |



## பகுப்பாய்வு

- 60% ஆனவர்கள் தமக்கு பொருளாதார உதவியை வழங்கும்படி கூறுகின்றனர்.
- 4%, 6%, 10%ஆனோர் முறையே கல்வி, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உதவியை நாடி நிற்கின்றனர்.
- கிளி-முல்லை மாவட்டங்களோடு ஒப்பிடும்போது பொருளாதார உதவி குறைவாகவே எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் ஓரளவு அடிப்படை வசதிகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.
- பெரும்பாலும் மக்களின் முக்கிய பிரச்சனையாக பொருளாதார பிரச்சனையே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் பொருத்தமான வருமானத்தை பெறக்கூடிய வகையில் எந்தவொரு வேலைவாய்ப்புக்களும் காணப்பட வில்லை.
- குறுகிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப் பட்டாலும் அவை பெண்களுக்கு ஏற்புடையவையாக காணப்படவில்லை.
- அறிவு சார்ந்த போக்கில் நகரும் இவ்வுலகில் பெண்களின் அவசியமான தேவைகளில் ஒன்றாக கல்வி காணப்படுவது வரவேற்கத்தக்கது. ஏனெனில் எப்பிரச்சனையாயினும் கல்வி மூலம் விடுபடலாமென பெண்கள் கருதுகின்றனர்.
- பெண்கள் கைவிடப்படும் தன்மை அதிகரித்து வருவதால் பராமரிப்பு பிரச்சனை முக்கிய பிரச்சனையாக எதிர்நோக்கப்படுகின்றது.
- உயர்பாதுகாப்பு வலயங்களும் தமது பாதுகாப்பினை அச்சுறுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- தெல்லிப்பளை பிரதேசத்தைவிட்டு இராணுவ அகற்றலினை மக்கள் எதிர்பார்க்கின்றனர். குறிப்பாக பெண்கள் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்த இதனை அமுல்படுத்தும்படி கேட்கின்றனர்.
- உயர்பாதுகாப்பு வலயத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசமாக இது காணப்படுகின்றது.

## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- சிவில் சமூகஅமைப்புக்களை அமைத்து பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல். குறிப்பாக இராணுவ கெடுபிடிகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.
- உயர் பாகாப்பு வலயங்களை அகற்றுதல்.
- இதற்கு பெண்அமைப்புக்களில் இருந்து அழுத்தங்களை கொடுத்தல்.
- வறிய மாணவர்களுக்கான விசேட உதவிகளை வழங்குதல் (விசேடமாக போரில் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான பராமரிப்பு மற்றும் உதவிகளை பெற்றுக்கொடுத்தல்)
- மாற்றுத்தொழில்களை ஏற்படுத்தலும், அதற்கான வசதிகளை உருவாக்கலும்.

- ❖ பெண்களுக்கான மகளிர் பல்கலைகழகங்களை உருவாக்குதல்.
- ❖ மகளிர் பேரூந்து சேவையினை அறிமுகப்படுத்துதல்.
- ❖ மூடப்பழக்கங்களை சமூகத்திலிருந்து அகற்றி பெண்விடுதலையை பெற்றுக் கொடுக்க வேண்டும்.
- ❖ பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்துவது கட்டாய பொறுப்பு ஆகும்.
- ❖ சர்வதேச தர கல்வியை பெற்றுக்கொடுப்பதன் மூலம் பிரதேசத்தை விரைவாக அபிவிருத்தியடைய செய்யலாம்.
- ❖ ஆதரவற்ற முதியோரை பராமரிப்பு இல்லங்களில் சேர்த்தல்.
- ❖ தலைமை தாங்கும் பெண்களுக்கான சமூக அந்தஸ்தை பெற்றுக்கொடுத்தல்.
- ❖ விசேட கடன் உதவி திட்டங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- ❖ சிறுவர்களின் பராமரிப்பினை உறுதிசெய்தல். இதற்கு சமூக மட்டத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் உதவிசெய்யவேண்டும்.
- ❖ 100% மலசலகூடங்கள் மற்றும் கிணறுகளை அமைத்துக்கொடுத்தல்
  அனர்த்த இடர் முகாமைத்துவத்துவ நிலையங்களை அமைத்தல். ஏனெனில் இப்பிரதேசத்தில் உள்ள சேந்தாங்குளம் மற்றும் கீரிமலை போன்ற பிரதேசங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட முக்கிய இடங்களாகும்.

# முடிவுரையும் சவால்களும்

**பெண் தலைமைத்தவ குடும்பங்களில் தலைமை தாங்கும் பெண்களை வலுப்படுத்தல்,**

பெண்களை வலுப்படுத்தல் என்ற எண்ணக்கருவில், சமூகத்தில் பொருளாதார மட்டத்தில் வலுப்படுத்தல் முன்னுரிமை பெறுகின்றது 1985இல் பெண்கள் தொடர்பான நைரோபி மாநாட்டில் பெண்கள் வலுவூட்டலை மையமாகக் கொண்ட ஐந்து எண்ணக்கருக்களை இங்கே முன் வைக்கலாம்.

1. பெண்கள் தம்மை பெறுமதிமிக்கவர்களாக உணர்தல்
2. தமது விருப்புக்களை தெரிவு செய்யும் உரிமை
3. தமது சொந்த வாழ்வை கட்டுப்படுத்தும உரிமை
4. பொருளாதார வாய்ப்புக்களை பெறுவதற்கான உரிமை
5. பொருளாதார ஒழுங்கை உருவாக்குவதன் மூலம் ஓர் சமூக மாற்றத்தை செயற்படுத்தும் வழிகாட்டியாக செல்வாக்கு செலுத்தக்கூடிய ஆற்றல்.

சாராலோங்லே என்பவரால் உருவமைக்கப்பட்ட பெண்களின் வலுவூட்டல் சட்டகத்தினை ஐ.நா. சிறுவர் கல்விக்கான நிதியம் ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வறிக்கையில் பெண்களை அபிவிருத்தியின் மையச்செயற்பாடுகளோடு

இணைத்து சமத்துவமான செயற்பாட்டை 5 மட்டங்களில் ஏற்படுத்தலாம். இவற்றுள் வலுவூட்டல் ஒவ்வொரு மட்டத்திலும் முக்கிய அம்சமாக விளங்குகிறது.

## வலுவூட்டல் மட்டங்களாவன

♦ **நலன்பேணல் (welfare)**

இங்கு பெண்களுக்கு தேவையான அடிப்படை தேவைகள் பற்றி கூறப்படுகின்றது. பெரும்பாலும் சமூக நலன்பேண் திட்டங்களை பெறுவதில் பெண்கள் பாரிய நன்மை அடைபவர்களாக இல்லை.

♦ **அடைதல்(access)**

வளங்களை சமமாக பெறுவதிலும் பெண்கள் பாரபட்சப்படுத்தப் படுகின்றனர். கல்வி வசதி, காணி உரிமை, கடன்வாய்ப்புக்கள் இவையாவும் பெண்கள் தமது முன்னேற்றத்தை அடைவதற்கு மிக அவசியமான தேவைகளாகும்.

♦ **விழிப்புணர்வை கூட்டுதல்**

பெண்கள் மத்தியில் அபிவிருத்தி மற்றும் வளங்களின் பாவனை, ஒதுக்கீடு தொடர்பாக நிலவும் அசமந்த தன்மை தொட்ர்பான விழிபுணர்வை அதிகரித்தல். பெண்கள் தமது வளர்ச்சிக்கு தடையாகவுள்ள காரணிகளை இனங்கண்டு கொள்ளாமலும் இருப்பர்.

♦ **கட்டுப்பாடு ( control)**

வேலைவாய்பு மற்றும் சமத்துவம் தொடர்பாக ஆண்கள் பெண்களுக் கிடையில் அதிகார சமன்பாடு இருத்தல் அவசியம். பெண்கள் தமது வாழ்க்கை, தமது பிள்ளைகளின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் தமது பங்களிப்பை அரசியல் தொடர்பாக தீர்மானம் எடுக்கக் கூடியவர்களாக இருத்தல்.

♦ **பங்குபற்றல் (participation)**

இம்மட்டத்தை அடைவதற்கு பெண்கள் ஆண்களோடு சமமாக தீர்மானம் எடுக்க கூடியவர்களாக இருத்தல். இந்நிலையை எட்டுவதற்கு பெண்கள் வலுவூட்டப்படுவதோடு சகலதுறைகளிலும் பங்காளர்களாக மாறி கூட்டாக செயற்படுவதன் மூலம் தமது பங்களிப்பை வலுப்படுத்தல்.

ஆகவே பெண்கள் இவ்வாறாக வலுவூட்டப்படும்போது அவர்கள் மத்தியில் விழிப்புணர்வு அதிகரித்து சனநாயகம், பெண்கள் உரிமை தொடர்பான விடயங்களில் பிரசார நடவடிக்கைகள் ஏற்படுத்துவதோடு கல்வி, தொடர்பாடல் நிலைமைகளில் வலுவூட்டப்பட்டு வீட்டு வன்முறை போன்ற பெண்களை பாதிக்கும் விடயங்களில் இருந்து துரிதமாக செயற்பட முடியும்.

## சவால்கள்

- முன் எப்போதும் இல்லாதளவில் போர் இடம்பெறும் பிரதேசங்களில் கணவனை இழந்த பெண்களின் தொகை அதிகரிப்பதை அவதானிக்க முடிகின்றது.
- 2000ம் ஆண்டின் அபிவிருத்தி இலக்குகள் 2015ல் பூரணப்படுத்தப்படுமாயின் பெண்களின் வறுமை மற்றும் அடையும் இலக்குகளை பூரணமாக பெறமுடியும்.
- பெரியளவில் அபிவிருத்திக்காக முதலிடும் ஐ.நா நிறுவனங்கள் ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்க நிதி உதவி நிறுவனங்கள் இவ்வாறான பெண்களுக்கு ஆதரவு அளிப்பது குறைவாக உள்ளது.

Table 8.7: Number of Widows by DS/AGA Division, Age, Dependency, Assistance, cause of husband death and Income, 2011

| GN Division | Relief Assistance wise (No. of. Families) | | | Husband Death causes wise (No. of Families) | | | | | | | Monthly Income wise (No. of. Families) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Received | Not Received | Total | Violence | Accident | Disease/Natural | Natural Disaster | Suicide | Other | Total | Under Rs1500/= | Rs. 1501-5000 | Rs. over 5000/= | Total |
| Delft | 105 | 96 | 201 | - | 1 | 196 | - | 4 | - | 201 | 150 | 47 | 4 | 201 |
| Islands South | 910 | | 910 | 57 | 21 | 832 | 0 | 0 | 0 | 910 | 740 | 170 | 0 | 910 |
| Islands North | 136 | 295 | 431 | 24 | 15 | 192 | 53 | 16 | 131 | 431 | 209 | 86 | 136 | 431 |
| Karainagar | 728 | 105 | 833 | 39 | 10 | 404 | 53 | 15 | 312 | 833 | 612 | 164 | 57 | 833 |
| Jaffna | 797 | 1,459 | 2,256 | 172 | 60 | 747 | 813 | 57 | 407 | 2,256 | 1,663 | 332 | 261 | 2,256 |
| Nallur | 1219 | 2273 | 3492 | 99 | 94 | 2116 | 365 | 72 | 746 | 3492 | 1674 | 975 | 843 | 3492 |
| Valikamam South West | 204 | 1569 | 1773 | 122 | 226 | | 1,402 | | 23 | 1773 | 1223 | 492 | 58 | 1773 |
| Valikamam West | 1,353 | 1,316 | 2,669 | 71 | 1,079 | 197 | 568 | 81 | 673 | 2,669 | 482 | 453 | 1,734 | 2669 |
| Valikamam South | 1418 | 648 | 2066 | 230 | 112 | 1644 | 6 | 73 | 1 | 2066 | 1626 | 266 | 174 | 2066 |
| Valikamam North | 346 | 1,142 | 1,488 | 24 | 68 | 1,163 | 3 | 72 | 158 | 1,488 | 1,048 | 285 | 155 | 1,488 |
| Valikamam East | 1172 | 1670 | 2842 | 392 | 155 | 2182 | 8 | 105 | 0 | 2842 | 1119 | 1338 | 385 | 2842 |
| Thenmaradchi | 2663 | 1047 | 3710 | 333 | 231 | 1866 | 781 | 163 | 336 | 3710 | 2879 | 559 | 272 | 3710 |
| Vadamaradchi South West | 1472 | 1342 | 2814 | 130 | 111 | 2087 | 184 | 66 | 236 | 2814 | 1957 | 500 | 357 | 2814 |
| Vadamaradchi North | 222 | 1916 | 2138 | 157 | 86 | 128 | 1589 | 81 | 97 | 2138 | 1821 | 208 | 109 | 2138 |
| Vadamaradchi East | 311 | 388 | 699 | 161 | 50 | 49 | 183 | 57 | 199 | 699 | 426 | 176 | 97 | 699 |
| Total | 13056 | 15266 | 28322 | 2011 | 2319 | 13803 | 6008 | 862 | 3319 | 28322 | 17629 | 6051 | 4642 | 28322 |

*Source: Divisional Secretariat Divisions, Jaffna*

Table 8.7: Number of Widows by DS/AGA Division, Age, Dependency, Assistance, cause of husband death and Income, 2011

| GN Division | Age wise (No of Widows) | | | | | | | Dependency Wise (No of Families) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Under 20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | Over 60 | Total | Non | One | Two | Three | Four | Five | Total |
| Delft | - | 3 | 7 | 21 | 48 | 122 | 201 | 104 | 41 | 24 | 17 | 10 | 5 | 201 |
| Islands South | 1 | 27 | 73 | 88 | 173 | 548 | 910 | 527 | 198 | 87 | 63 | 24 | 11 | 910 |
| Islands North | 3 | 26 | 32 | 65 | 80 | 225 | 431 | 161 | 127 | 58 | 40 | 31 | 14 | 431 |
| Karainagar | 0 | 46 | 113 | 162 | 193 | 319 | 833 | 487 | 142 | 112 | 52 | 21 | 19 | 833 |
| Jaffna | 14 | 48 | 169 | 316 | 600 | 1,109 | 2,256 | 948 | 478 | 325 | 260 | 137 | 108 | 2,256 |
| Nallur | 3 | 53 | 171 | 381 | 744 | 2140 | 3,492 | 1,535 | 863 | 426 | 325 | 208 | 135 | 3492 |
| Valikamam South West | 2 | 52 | 155 | 284 | 473 | 807 | 1,773 | 902 | 333 | 243 | 144 | 94 | 57 | 1773 |
| Valikamam West | 41 | 259 | 535 | 689 | 446 | 699 | 2,669 | 545 | 390 | 244 | 149 | 82 | 1,259 | 2,669 |
| Valikamam South | - | 56 | 141 | 312 | 458 | 1099 | 2,066 | 1136 | 380 | 227 | 166 | 89 | 68 | 2066 |
| Valikamam North | 1 | 34 | 142 | 187 | 316 | 808 | 1,488 | 625 | 314 | 228 | 144 | 114 | 63 | 1,488 |
| Valikamam East | 41 | 194 | 718 | 631 | 579 | 679 | 2,842 | 640 | 442 | 490 | 582 | 408 | 280 | 2842 |
| Thenmaradchi | 8 | 109 | 302 | 557 | 928 | 1806 | 3710 | 1347 | 731 | 595 | 487 | 304 | 246 | 3710 |
| Vadamaradchi South West | 2 | 52 | 171 | 313 | 649 | 1627 | 2814 | 1067 | 580 | 468 | 280 | 207 | 212 | 2814 |
| Vadamaradchi North | | 30 | 95 | 224 | 396 | 1393 | 2138 | 11 | 1079 | 393 | 258 | 170 | 227 | 2138 |
| Vadamaradchi East | 0 | 53 | 78 | 117 | 150 | 301 | 699 | 349 | 155 | 103 | 60 | 25 | 7 | 699 |
| Total | 116 | 1042 | 2902 | 4347 | 6233 | 13682 | 28322 | 10384 | 6253 | 4023 | 3027 | 1924 | 2711 | 28322 |

..Contd

Telephone

District Secretary 021 228 3965

Director - Planning 021 228 5760

Assist. Director - Planning 021 228 5356 / 021 228 5354

General 021 228 5355

Fax 021 228 5760

Email dpskili@hotmail.com / dpskili@slnet.lk

மாவட்ட திட்டமிடல் செயலகம்

දිස්ත්‍රික් ක්‍රමසම්පාදන ලේකම් කාර්යාලය

**District Planning Secretariat**

மாவட்ட செயலகம் - கிளிநொச்சி

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කිලිනොච්චි

District Secretariat Kilinochchi

My No KN/DPS/NGO//2013

Your No

15.05.2013

Director,
Centre for women & Development,
Jaffna.

**<u>Compling data of female headed household in killinochchi district</u>**

This has reference to your letter dated 08.05.2013 on the obove subject,

The details of female headed households are given below for your necessary action please.

| No | D.S Division | No of Families Female headed house hold |
|---|---|---|
| 01 | Karachchi | 3783 |
| 02 | Kandawalai | 1188 |
| 03 | Poonakary | 952 |
| 04 | Pachchilaipalli | 247 |
| | Total | 6170 |

Mrs.R.Ketheeswaran,
Govt.Agent/ District Secretary.
Killinochchi District.

Mrs.R.Ketheeswaran
Govt.Agent/
Dist.Secretary
Kilinochchi District

Table :- 15.3

### DETAILS OF WIDOWS IN MULLAITIVU DISTRICT BY DS DIVISION AS AT 31.12.2011

| No | D.S.Division | Age Wise (No.of Widows) | | | | | | | Dependency wise (No.of Families) | | | | | | | Husband Death Cause Wise | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Under 20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | Over 60 | Total | Non | One | Two | Three | Four | Five | Total | Violence | Accident | Disease/ Natural | Suiside | Other | Total |
| 1 | Maritimepattu | 4 | 181 | 205 | 218 | 222 | 515 | **1345** | 497 | 373 | 245 | 75 | 73 | 82 | **1345** | 331 | 34 | 898 | 12 | 70 | **1345** |
| 2 | Puthukkudiyiruppu | 24 | 144 | 161 | 188 | 194 | 239 | **950** | 92 | 178 | 170 | 200 | 190 | 120 | **950** | 132 | 208 | 183 | 237 | 190 | **950** |
| 3 | Oddusuddan | 1 | 54 | 91 | 108 | 224 | 365 | **843** | N.A | | | | | | **843** | 272 | 26 | 519 | 26 | 0 | **843** |
| 4 | Thunukkai | 5 | 28 | 78 | 116 | 101 | 123 | **451** | 25 | 116 | 112 | 127 | 30 | 41 | **451** | 351 | 7 | 54 | 11 | 28 | **451** |
| 5 | Manthai East | 13 | 60 | 58 | 67 | 76 | 73 | **347** | Not Available | | | | | | | 119 | 0 | 228 | 0 | 0 | **347** |
| | Total | 47 | 467 | 593 | 697 | 817 | 1315 | 3936 | 614 | 667 | 527 | 402 | 293 | 243 | 2746 | 1205 | 275 | 1882 | 286 | 288 | 3936 |

Source:-A.G.AA Office,Mullaitivu District

Table :- 15.2

**FEMALE HEADED FAMILIES, WIDOW & WIDOWER IN MULLAITIVU DISTRICT AS AT 31.12.2011**

| Se.No | A.G.A.Division | Female Head Families | No.of Widows | No.of Widower |
|---|---|---|---|---|
| 1 | Maritimepattu | 1412 | 1395 | 349 |
| 2 | Puthukkudiyiruppu | 966 | 1134 | 560 |
| 3 | Oddusuddan | 973 | 843 | 245 |
| 4 | Thunukkai | 692 | 572 | 117 |
| 5 | Manthai East | 429 | 347 | 23 |
| 6 | Welioya | 477 | 508 | 82 |
| | **Total** | **4949** | **4799** | **1376** |

Source:-A.G.AA Office,Mullaitivu District

தீபம் பிறிண்டேர்ஸ், 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P : 0772506234